# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 045 வள்ளுவர் ஆண்டு: 2045 மார்கழி 26, சனிக்கிழமை 10.01.2015


வானிலை
மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளையில் குளிரான காலநிலை காணப்படும்.

## ஆளுநர் பதவி விலகினார்

கொழும்பு, ஜன. 10
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று மாலை பதவி விலகியுள்ளார். அதே போன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சனும் பதவி விலகியுள்ளளார் என்று தெரிய வருகின்றது.
ஜனாதிபதித் தேர்தலுடன் நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதையடுத்தே இவர்கள் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந–5)


பதவியேற்பின்போது

# நிகழ்ந்தது மாற்றம்

## இலங்கையின் 6ஆவது ஜனாதிபதியாக நேற்று மைத்திரிபால சிறிசேன உடன் பதவியேற்றார்

கொழும்பு, ஜனவரி 10
ஆதரவாளர்கள், அரசியல் பிரமுகர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் முன்பாக இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் ஆறாவது ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பதவியேற்றார். மாற்றம் ஒன்றை நிகழ்த்துமாறு அவர் விடுத்த வேண்டுகைக்குச் செவிசாய்த்து மக்கள் வழங்கிய ஆணையை ஏற்று உடனடியாகவே பதவியேற்றுக்கொண்டார் மைத்திரிபால. கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று மாலை 6.21 மணியளவில் மிக எளிய முறையில் அவரது பதவியேற்பு நிகழ்வு நிகழ்ந்தேறியது. பக்.18

## ஆடம்பரம் இன்றி நடந்த எளிய பதவியேற்பு

### முதற்றடவையாக ஆசியாவின் அதிசயமாகியது நிகழ்வு

கொழும்பு, ஜன. 10
எந்தவித ஆடம்பரமுமின்றி, மிகச் சாதாரணமாக ஏராளமான ஆதரவாளர்களும் பொதுமக்களும் வெகு அருகில் இருக்க புதிய ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பதவியேற்பு நிகழ்வு நேற்று மாலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றது. பக்.18

## வீடு சென்றார் மஹிந்த

கொழும்பு, ஜன. 10
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அம்பாந்தோட்டை மெதமுலனவில் உள்ள தனது பரம்பரை வீட்டுக்கு நேற்றுக் குடும்பத்துடன் சென்றுள்ளார். கொழும்பு ஜனாதிபதி செயலகத்திலிருந்து கார் மூலமாகவே மெதமுலனவுக்குச் சென்றுள்ளார்.
ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைத் தழுவிய மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை 6.30 மணிக்கு அலரி மாளிகையிலிருந்து வெளியேறியிருந்தார். அதன் பின்னர் அவர் ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்றிருந்தார். பக்.18

## பிரதமரானார் ரணில்

கொழும்பு, ஜன. 10
இலங்கையின் 15 ஆவது பிரதமராக ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றுக் கொண்டார். அதையடுத்து அமைச்சரவையை மாற்றி அமைக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி இன்று மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஜனாதிபதித் தேர்தலின் மூலம், பொது எதிரணியின் பக்.20

## யாழ். பல்கலை பேரவையின் உறுப்பினர்களே விலகுங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு வெளிவாரியாக அரசியல் ரீதியில் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது. பக்.02

## தேசிய அரசில் தமிழர்கள் அழைத்தால் பரிசீலிப்பு

### சம்பந்தன் நேற்றுக் கருத்து

கொழும்பு, ஜன. 10
புதிதாக அமைக்கப்படவுள்ள தேசிய அரசில் பங்கெடுக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டால், அது குறித்து பரிசீலிப்போம் என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.
தமிழ் மக்கள் தங்களுக்கு நீதியும் – நியாயமும் கிடைக்கும் என்று கருதியே ஆட்சி மாற்றதுக்காக வாக்களித்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.
பொது எதிரணியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகக் பக்.21

## 2ஆவது தடவையும் போட்டியிட மாட்டேன்

### மைத்திரி நேற்று உறுதி



கொழும்பு, ஜன. 10
மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. நாட்டில் புதிய பக்.20

## மைத்திரி மறுப்பு

கொழும்பு, ஜன. 10
பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் முன்னிலையில் பதவியேற்பதற்கு புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்து விட்டார் என்று தெரிகிறது. அதற்குப் பதிலாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவருமான நீதியரசர் கே.ஸ்ரீபவன் முன்னிலையில் அவர் பதவியேற்றார்.
ஜனாதிபதிகள் பொதுவாக உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் முன்பாகவே பதவியேற்பது வழமை. எனினும் தனது பதவியை பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் முன்னிலையில் ஏற்பதற்கு மைத்திரி மறுத்து விட்டார் என்று தெரிகிறது. (உ–5)

## தீர்வு ஒன்றை எட்டுவதற்கு மைத்திரி ஓர் அத்திபாரம்

### நம்பிக்கை வெளியிடுகிறார் வடக்கு முதலமைச்சர்

கொழும்பு, ஜன. 10
நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் உள்ள, தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வை எட்டுவதற்கு, மைத்திரிபால சிறிசேன புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியிருப்பது அத்திபாரமாக அமையும் என்று நம்புவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதித் தேர்தல் பக்.21


வெற்றிக் களிப்பில் ரணில் சந்திரிகா

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**மன்னார்**

| | | |
|---|---|---|
| மைத்திரி | 45,543 வாக்குகள் | 85.13% |
| மஹிந்த | 6,824 வாக்குகள் | 12.76% |
| செல்லுபடியான வாக்குகள் | 53,500 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 895 | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 54,365 | |
| வாக்களிக்க தகுதி பெற்றோர் | 79,433 | |



ஜனாதிபதி தேர்தல் 2015

**முல்லைத்தீவு**

| | | |
|---|---|---|
| மைத்திரி | 35,441 வாக்குகள் | 78.95% |
| மஹிந்த | 7,935 வாக்குகள் | 17.68% |
| செல்லுபடியான வாக்குகள் | 44,889 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,052 | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 45,941 | |
| வாக்களிக்க தகுதி பெற்றோர் | 63,920 | |



ஜனாதிபதி தேர்தல் 2015

**யாழ்ப்பாணம்**

| | | |
|---|---|---|
| மைத்திரி | 214,718 வாக்குகள் | 77.83% |
| மஹிந்த | 61,154 வாக்குகள் | 22.17% |
| செல்லுபடியான வாக்குகள் | 286,865 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 8,098 | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 294,963 | |
| வாக்களிக்க தகுதி பெற்றோர் | 450,146 | |



ஜனாதிபதி தேர்தல் 2015

**வவுனியா**

| | | |
|---|---|---|
| மைத்திரி | 55,683 வாக்குகள் | 75.17% |
| மஹிந்த | 16,678 வாக்குகள் | 22.51% |
| செல்லுபடியான வாக்குகள் | 74,080 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,371 | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 75,451 | |
| வாக்களிக்க தகுதி பெற்றோர் | 109,705 | |



ஜனாதிபதி தேர்தல் 2015

**கிளிநொச்சி**

| | | |
|---|---|---|
| மைத்திரி | 38,856 வாக்குகள் | 72.11% |
| மஹிந்த | 13,300 வாக்குகள் | 24.68% |
| செல்லுபடியான வாக்குகள் | 53,886 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,940 | |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 55,826 | |
| வாக்களிக்க தகுதி பெற்றோர் | 79,093 | |



ஜனாதிபதி தேர்தல் 2015



# மைத்திரி வெற்றி கைகொடுத்தனர் தமிழ் பேசும் மக்கள்

கொழும்பு, ஜனவரி 10

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் மற்றும் முஸ் லிம்களின் பெரும் ஆதரவுடன் வெற்றி பெற்று ஜனாதிபதியானார் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவைவிட 4 லட்சத்து 49 ஆயிரத்து 72 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றியீட்டினார்.

வடக்கு – கிழக்கில் மட்டும் மைத்திரிக்கு 9 லட்சத்து 78 ஆயிரத்து 111 வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 80 சதவீதமானவை தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் வாக்குகளாகும்.

இது தவிர, தமிழ் பேசும் மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் கொழும்பு, நுவரெலியா பகுதிகளிலும் மலையகத் தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளிலும் மைத்திரிபால சிறி சேனவுக்கே அவர்கள் பெருமெடுப்பில் ஆதரவளித்துள்ளார்கள். தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் வாக்குகள் இன்றி மைத்திரியின் வெற்றி சாத்தியமாகியிருக்காது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். கடந்த ஒரு தசாப்தத்தில் இலங்கை அரசியலில் இடம்பெற்ற மிகப் பெரும் மாற்றம் இது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். மைத்திரி வெற்றி பெற்றதன் மூலம் மஹிந்த ராஜபக்ஷவின் 10 ஆண்டுகால நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை முடிவுக்கு வந்தது. முன்னதாக, அவர் மூன்றாவது பதவிக் காலத்தைப் பெறுவதற்கு ஆசைப்பட்டிருந்தார்.

63 வயதாகும் மைத்திரிபால சிறிசேன உடனடியாகவே தனது பதவியைப் பொறுப்பேற்கிறார். தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி தனது 100 நாள்கள் வேலைத் திட்டத்தையும் அவர் உடனடியாகவே ஆரம்பிக்கிறார்.




மைத்திரிபால சிறிசேன

6,217,162 வாக்குகள்




மஹிந்த ராஜபக்ஷ

5,768,090 வாக்குகள்



## வடக்கில் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 10

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதுடன், தமிழர்கள் பெருவாரியான வாக்குகளை வழங்கிய மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளமையினால் வடக்கிலும் நேற்று பல இடங்களில் பட்டாசு கொழுத்தி மக்கள் வெற்றியைக் கொண்டாடினார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில், எதிரணி வேட்பாளர் மைத்திரிபால வெற்றி பெற்றிருந்தார். இதனால் நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதனைக் மக்கள் இதனை வெகு சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். (ந–5)

## யாழ். பல்கலை பேரவையின் உறுப்பினர்களே விலகுங்கள்

### வெளிவாரியாக நியமனம் பெற்றவர்களிடம் வலியுறுத்துகிறது ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு வெளிவாரியாக அரசியல் ரீதியில் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதை அடுத்து உடனடியாக ஊழியர் சங்கம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை 25 உறுப்பினர்களைக் கொண்டது. உள்ளக ரீதியாக பதவி வழியாக துறைத் தலைவர்கள் மற்றும் துணைவேந்தர் உள்ளிட்ட 12 பேர் நியமனம் பெறுகின்றனர். வெளிவாரியாக 13 பேரும் நியமனம் செய்யப்படுகின்றனர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவையில் தற்போது பதவியில் உள்ளவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பரிந்துரையின் பேரில் உயர் கல்வி அமைச்சரால் நியமனம் செய்யப்பட்டவர்களாவர். ஒவ்வொரு மாதமும் நடைபெறும் பேரவைக்கு கூட்டத்துக்கு ஒரு சில நாள்கள் முன்பாக, அமைச்சர் டக்ளஸின் அலுவலகம் அமைந்துள்ள ஸ்ரீதர் தியேட்டருக்குச் செல்லும் இந்த உறுப்பினர்கள், அமைச்சரின் அரசியல் வழிநடத்தல்களைப் பெற்றுச் செயற்பட்டு அதன்படியே செயற்படுகிறார்கள் என்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நீண்ட நாள்களாகவே குற்றஞ்சாட்டி வருகின்றது. இதனால் பல்கலைக்கழகத்தின் சுயாதீனமும் அதன் தகைமையும் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.


இந்த நிலையில், "எதிர்காலத்தில் தூய்மையான, அரசியல் கலப்பற்ற, வினைத்திறன் மிக்க பல்கலைக்கழக நிர்வாகம் அமைவதற்கு வசதியாக யாழ். பல்கலைக்கழக வெளிவாரி உறுப்பினர்கள் அனைவரும் உடனடியாக தாமாகவே பதவி விலக வேண்டும். அவர்களது அந்தப் பதவி விலகலானது யாழ். பல்கலைக்கழகமீள் எழுச்சியின் முதற்படியாக அமையட்டும்" என சங்கம் கேட்டுள்ளது.

(உ–4)









On behalf of our new benevolent President and dynamic and non-corrupt Prime Minister and all other Party leaders, I wish to convey our deep and sincere gratitude to all those who voted for the change for a new Sri Lanka and brought all people warmly together.

We will never forget this understanding and good will so generously extended to our united team. We look forward to being together as one team in April 2015.

"Be Blessed"
Cornel Perera

எங்கள் புதிய அன்பாதரவான ஜனாதிபதி, ஊழலற்ற, கம்பீரமான பிரதம மந்திரி மற்றும் சகல கட்சித் தலைவர்கள் ஆகியோர் சார்பில் புதியதொரு இலங்கைக்கான மாற்றத்திற்காக வாக்களித்து அனைத்து மக்களையும் ஒன்றிணைத்த சகலருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஐக்கியப்பட்டிருக்கும் எங்கள் குழுவினருக்கு பெருந்தன்மையுடன் வழங்கப்பட்ட இந்த புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தையும் நாங்கள் ஒருபோதுமே மறக்க மாட்டோம். ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி நாம் ஒன்றுபட்டு இணைந்து கொள்வோம் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

"எங்கள் ஆசிகள்"
கோனெல் பெரேரா

# செய்திகள்

## மைத்திரியின் வெற்றியை அறிவித்தார் ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஜன. 10

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் மைத்திபால சிறிசேன வெற்றி பெற்று இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் 7ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று நேற்று முற்பகல் 11.30 மணியளவில் தேர்தல்கள் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் நிகழ்வு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த, ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ, ஜனாதிபதி வேட்பாளர் ஸ்ரீதுங்க விஜயசூரிய உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

நிகழ்வின் ஆரம்பத்தில் தேர்தல் முடிவை அறிவித்த ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, நடைபெற்று முடிந்த தேர்தலில் 62 லட்சத்து 17 ஆயிரத்து 162 வாக்குகளைப் பெற்ற அதாவது 51.28 வீத வாக்குகளைப் பெற்ற மைத்திரிபால சிறிசேனவை நாட்டின் ஜனாதிபதியாகத் அறிவிக்கிறேன் என்றார்.

தேர்தலை அமைதியாக நடத்தி முடிப்பதற்கு உதவிய பொலிஸ் மா அதிபர், பொலிஸார், முப்படைத் தளபதிகள், தேர்தல் திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள், தேர்தல் கடமைகளை மேற்கொண்டிருந்த அரச ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் அவர் நன்றி கூறினார்.

"தேர்தல் ஆணையாளர் என்ற ரீதியில் எனக்கு அமைந்திருந்த அதிகாரத்தின்கீழ் முடிந்த அளவுக்கு சுமுகமான தேர்தலை நடத்த காத்திரமான நடவடிக்கையை எடுத்திருந்தேன். ஆயினும் சிற்சில தவறுகள் இடம்பெற்றிருக்கலாம். அதற்கு முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். தேர்தல் ஆணையாளர் ஒருவருக்குக் கிட்டும் முழுமையான அதிகார பலமும் எனக்குக் கிடைக்குமானால் இந்தத் தேர்தலை இன்னும் சிறப்பாக நடத்தியிருக்கலாம். கடந்த நவம்பர் 21ஆம் திகதியிலிருந்து இந்த ஜனவரி 8ஆம் திகதிவரை ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடித்துள்ள காலகட்டத்தினுள் நாம் அடைந்திருந்த சிரமங்கள் எமக்கு மட்டுமே தெரியும்.

எமது புதிய ஜனாதிபதி உறுதியளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என நான் எதிர்பார்க்கிறேன். இதனை நான் தேர்தல் ஆணையாளர் என்ற ரீதியில் அல்ல- பொது மகன் என்ற ரீதியில் கூறுகிறேன். புதிய ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் மற்றுமுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரிடமும் நான் வேண்டி நிற்பது என்னவென்றால், பழிவாங்கல் எதுவும் வேண்டாம். அன்பாகவும் நேசமாகவும் நடந்து கொள்ளுங்கள்" என்றார் ஆணையாளர்.

(உ-4)



## இறுதி முடிவு வருமுன்பே மஹிந்த வெளியேறினார்

### அலரி மாளிகையிலிருந்து கறுப்பு நிறக் காரில் புறப்பட்டார்

கொழும்பு, ஜன. 10

ஜனாதிபதித் தேர்தலில் தான் அடைந்த தோல்வியை ஒப்புக்கொண்டு – மக்களின் ஜனநாயகத் தீர்ப்புக்கு மதிப்பளித்து நேற்று காலை 6.30 மணிக்கு, அலரி மாளிகையிலிருந்து வெளியேறினார் மஹிந்த ராஜபக்ஷ, தேர்தலின் இறுதி முடிவு உத்தியோகபூர்வமாகத் தேர்தல் திணைக்களத்தால் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே அலரி மாளிகையிலிருந்து வெளியேறும் முடிவை எடுத்தார் மஹிந்த. பெரும் எண்ணிக்கையான வாக்குகள் வித்தியாசத்தில் மைத்திரிபால சிறிசேன வெற்றியை நெருங்கிவிட்டார் என்ற உறுதியான தகவல் கிடைத்ததை அடுத்தே அவர் இந்த முடிவை எடுத்தார் என்று தெரிகிறது.

மாளிகையைவிட்டு வெளியேறுவதற்கு முன்னதாக அதிகாலையில், ஐக்கியத் தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அழைத்துக் கலந்துரையாடினார். அந்தச் சந்திப்பு சுமார் 20 நிமிடங்கள் நீடித்தது. புதிய ஜனாதிபதி தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு வசதியாகத் தான் உடனடியாகவே அலரி மாளிகையை விட்டு வெளியேறுகிறார் என்று அப்போது மஹிந்த தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர், அலரி மாளிகையிலிருந்து குடும்பத்துடன், மஹிந்த ராஜபக்ஷ வெளியேறினார். மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளித்துத் தான் வெளியேறுகிறார் என்று தெரிவித்துவிட்டுத் தனது குண்டு துளைக்காத கறுப்பு நிறக் காரில் ஏறி அவர் வெளியேறினார். (உ-5)

# தமிழர் வாக்குகளால் மைத்திரிக்கு வெற்றி



கொழும்பு, ஜன. 10

மைத்திரிபால சிறிசேனவுக்கும், மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தென் பகுதியில் சமனான அளவிலேயே வாக்குகள் கிடைத்துள்ளன. வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள், மைத்திரிபால சிறிசேனவுக்கு 8 சதவீதமான வாக்குகளை வழங்கியுள்ளனர். இதன்மூலமே 51.28 சதவீதம் பெற்று மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டியுள்ளார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன 62 லட்சத்து 17 ஆயிரத்து 162 வாக்குகளையும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 57 லட்சத்து 68 ஆயிரத்து 90 வாக்குகளையும் பெற்றனர். இதன் மூலம் மைத்திரிபால சிறிசேன 4 லட்சத்து 49 ஆயிரத்து 72 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். மைத்திரிபால சிறிசேன 51.28 சதவீத வாக்குகளையும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 47.58 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் மைத்திரிபால சிறிசேனவுக்கு 9 லட்சத்து 78 ஆயிரத்து 111 வாக்குகளும், மஹிந்த ராஜபக்ஷவுக்கு 3 லட்சத்து 23 ஆயிரத்து 600 வாக்குகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. இதன் மூலம் வடக்கு – கிழக்கு மாகாணத்தில் மைத்திரிபால சிறிசேன 6 லட்சத்து 54 ஆயிரத்து 511 வாக்குகளால் முன்னிலை பெற்றுள்ளார்.

இது செல்லுபடியான ஒட்டுமொத்த வாக்களிப்பின் 8 சதவீதமாகும். மைத்திரிபால சிறிசேனவுக்கும், மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் தென் பகுதியில் பெரிய வாக்கு வித்தியாசம் இருக்கவில்லை. ஆனால் வடக்கு – கிழக்கு மக்களின் வாக்குகளினால் ஏற்பட்ட பெரிய வாக்கு வித்தியாசத்தினாலேயே, பொது எதிரணி வேட்பாளருக்கு 51சதவீதம் கிடைத்துள்ளது. (த-5)

## மணல் கொள்ளையை தடுத்தவர் மீது தாக்குதல்

வடமராட்சி, ஜன.10

மணல் கொள்ளையைத் தடுப்பதற்கு முற்பட்ட ஒருவர் மணல் கொள்ளையர்களால் தாக்கப்பட்டார்.

இந்தச்சம்பவம் நேற்றுக்காலை 7 மணியளவில் வல்லிபுரக் கோவிலுக்கு அருகாமையில் உள்ள திலுந்தின் எனும் இடத்தில் நடைபெற்றது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

வடமராட்சி வல்லிபுரக் கோவிலுக்கு அருகாமையிலுள்ள திலுந்தின் என்னும் பகுதிக்கு நேற்றுமுன்தினம் இரவு உழவு இயந்திரத்துடன் வந்த சிலர் அனுமதியின்றி வயல் மணலை ஏற்ற முற்பட்டுள்ளனர். இதனைப் பொறுக்க முடியாத ஒருவர் அவர்களுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

இதனால் ஆத்திரமுற்ற மணல் கொள்ளையர்கள் நேற்றுக் காலை அவரது வீட்டுக்குச் சென்று தாக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பகுதியில் கடல் மணல் மற்றும் வயல் மணல் அனுமதியின்றி சூறையாடப்பட்டுக்கொண்டிருக்கிறது. தினமும் இரவு வேளைகளில் வெளிச்சமின்றி உழவு இயந்திரங்கள் ஓடிக்கொண்டே இருக்கின்றன.

இது தொடர்பாகப் பருத்தித்துறை பொலிஸாரிடம் பலமுறை முறைப்பாடு செய்தும் பயனில்லை என அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உரியவர்கள் கவனமெடுத்து மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்திதமது வளத்தைப்பாதுகாக்குமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-422)

## மில்ரோயும் மைத்திரியுடன்

கொழும்பு, ஜன. 10

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் கட்சித் தாவலுடன் ஆரம்பமாகியிருந்தது. இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து புதிய ஜனாதிபதி தெரிவாகியுள்ள நிலையில், ஆளும் கட்சியிலிருந்து தாவுவதற்கு சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் முடிவு செய்துள்ளார்.

சமூக நலன்புரி சிரேஷ்ட அமைச்சரான மில்ரோய் பெர்னாண்டோவே இவ்வாறு முடிவு செய்துள்ளார். ஆனமடுவையில் வைத்தே அவர் இந்த உறுதிமொழியை நேற்று வழங்கியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவை சந்தித்தே ஜனாதிபதி மைத்திரிக்கு ஆதரவளிப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

(த-5)

## மஹிந்தவை மெச்சினார் ஜோன் ஹெரி

கொழும்பு, ஜன. 10

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளதற்குப் பாராட்டுத் தெரிவித்துள்ள அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் ஹெரி, தேர்தல் முடிவை அமைதியாக ஏற்றுக்கொண்டதற்காகவும் அதிகாரத்தை ஒழுங்கு முறையில் சிக்கல்கள் இன்றிக் கைமாற்றியதற்காகவும் முன்னாள் ஜானதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மெச்சியுள்ளார்.

"அமைதியான கௌரவமான பண்பாட்டுடன் தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொண்டமைக்காகவும், இலங்கையில் அதிகாரத்தின் ஒழுங்குமுறையிலான பரிமாற்றத்துக்காகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மெச்சுகிறேன்" என்று ஜோன் ஹெரி நேற்று வெளியிட்ட தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேர்தல் வெற்றிகரமாக நடந்து முடிந்தமைக்கு இலங்கை மக்களுக்குப் பாராட்டு.

பதற்றத்தால் தேர்தல் தடைப்படாமல் இருப்பதற்கும் தேர்தல் வன்முறைகளால் பெருமளவில் நடைபெறாமல் தடுத்தமைக்காகவும் தேர்தல்கள் ஆணையாளர், பாதுகாப்புப் படையினர், சிவில் சமூகத்தினர் மற்றும் வேட்பாளர்களுக்கு அமெரிக்கா தனது பாராட்டுக்களைத் தெரிவிக்கிறது. அடுத்து வரும் நாள்களிலும் இதனைத் தொடர வேண்டும் – இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# மைத்திரிக்கு நேற்று மோடி வாழ்த்து



கொழும்பு, ஜன.10
இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.
இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் 7ஆவது ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன மக்களின் அமோக ஆதரவுடன் தெரிவாகினார். அவர் நேற்று மாலை பதவியேற்றார்.
அவரது வெற்றி உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு முன்பாக, தொலைபேசி மூலம் அவரைத் தொட்பு கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்தார்.
அமைதியான மற்றும் ஜனநாயகமான தேர்தலை முன்னெடுப்பதற்காக ஒத்துழைத்த இலங்கை மக்களைத் தான் வாழ்த்துவதாகவும், இந்தியா இலங்கையின் நெருங்கிய நண்பன், அத்துடன் இந்தியா இலங்கையின் சமாதானம், அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்துக்காகத் தொடர்ந்தும் தனது ஆதரவை வழங்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மீண்டுமொருமுறை நினைவு படுத்திக் கொள்கிறேன் எனவும் மோடி குறிப்பிட்டுள்ளார். (உ–5)

# மஹிந்தவைக் கேலி செய்து வலைத் தளங்களில் கருத்து



கொழும்பு, ஜன. 10
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், அவரது குடும்பத்தினரையும் கேலி செய்து சமூக வலைத் தளங்களில் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். அத்துடன் ஆட்சி மாற்றத்தை வரவேற்றும் தமது கருத்துக்களை சமூக வலைத் தளங்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர்.
இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட இரு பிரதான வேட்பாளர்களுமே சமூக வலைத் தளங்கள் ஊடாகவே பரப்புரைகளை மேற்கொண்டிருந்தனர். டுவிட்டர், பேஸ்புக் ஊடாக இந்தப் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோல்வியடைந்திருந்தார்.
தேர்தல் முடிவுகள் நேற்று அதிகாலை வெளியாகத் தொடங்கியது. ஆரம்பத்தில் மஹிந்த ராஜபக்ஷ முன்னணியிலிருந்தார். கிளிநொச்சி மாவட்ட தேர்தல் முடிவுகளுடன் மைத்திரி முன்னிலை வகித்தார். இதனையடுத்து பேஸ்புக்கில் பலரும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய கருத்துக்களை பதிவிட்டனர். அத்துடன் மஹிந்த ராஜபக்ஷவைக் கிண்டலடித்து வீடியோக்களையும் பதிவேற்றினர்.
இதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ சார்பாகப் பரப்புரை செய்த பேஸ்புக் கணக்குகள் யாவும் நேற்று காலையிலிருந்தே செயலிழந்து காணப்பட்டன.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ டுவிட்டரில் பதிவு இட்டிருந்தார். இதுவரையில் ஆதரவு வழங்கிய நாட்டு மக்களுக்கு நன்றி என்று அதில் அவர் தெரிவித்திருந்தார். அதற்கும், அழுதது போதும் வெளியேறுங்கள் என்று பதில் வழங்கி, மஹிந்த குடும்பத்தினரைக் கிண்டலடித்து வேறு சிலர் பதிவு செய்தனர். (த–5)

# கனடா தமிழர் பேரவை மைத்திரிக்கு வாழ்த்து

## நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கு உழைக்குமாறும் கோரிக்கை



கொழும்பு, ஜன.10
மிக நெருக்கமான போட்டி நிலையில் நடந்தேறிய இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய மைத்திரிபால சிறிசேனவுக்கு கனேடிய தமிழர் பேரவை வாழ்த்துத் தெரிவித்துள்ளது.
சிறிசேனவின் இந்தத் தேர்தல் வெற்றி, மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டி, புதிய ஜனநாயக சகாப்தத்துக்கான வாய்ப்புக்குரிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது என்றும் கனேடிய தமிழர் பேரவை குறிப்பிட்டுள்ளது.
அது தெரிவித்துள்ளவை வருமாறு:–
இலங்கைத் தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வழிகாட்டலில், புதிய ஆரம்பத்துக்கான எதிர்பார்ப்போடு திரண்டு வாக்களித்துள்ளனர். தற்போதைய அரசினால் பல ஆண்டுகளாக ஏற்படுத்தப்பட்டு வந்த துன்பங்களுக்கு இடையிலும், பல்வேறு அச்சுறுத்தல் நடவடிக்கைகளுக்கு மத்தியிலும், இந்தத் தேர்தலை ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் அதிகம் எதிர்பார்க்கப்படும் மாற்றத்துக்கான குறியீடாகப் பயன்படுத்தியிருக்கின்றனர். இந்தப் புதிய ஆரம்பத்தின் உதயத்தில், இலங்கையின் அனைத்து சமூகங்களினதும் அபிலாஷைகளுக்கும் இடமளிப்பதன் மூலம் முழு நாட்டிலும் உண்மையான அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த முன்வருமாறு சிறிசேனவைக் கனேடிய தமிழர் பேரவை கோருகின்றது.

**இலங்கையின் அனைத்து சமூகங்களினதும் அபிலாஷைகளுக்கும் இடமளிப்பதன் மூலம் முழு நாட்டிலும் உண்மையான அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த முன்வருமாறு சிறிசேனவை கனேடிய தமிழர் பேரவை கோருகின்றது.**

தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், இலங்கைத் தீவில் வாழும் அனைத்துப் பிரசைகளும் கௌரவத்துடனும் சமத்துவமாகவும் நடத்தப்படுவதை உறுதி செய்கின்ற நிலையான தீர்வைக் காணவும், ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தலைமைகளுடன் சேர்ந்து உழைக்க முன்வருமாறு புதிய ஜனாதிபதியை நாங்கள் கோருகின்றோம்.
அரசுக் கட்டமைவு அதிகாரத்தில் தாங்களும் அர்த்தமுள்ள வகையில் பங்களித்தல் வேண்டும் என்ற இலங்கையின் பல்வேறுபட்ட மக்களின் அபிலாஷை – எதிர்பார்ப்பு – கவனிக்கப்பட வேண்டும். இலங்கையின் நீதித்துறை விரைந்து சீரமைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்து, 18 ஆவது திருத்தத்தை நீக்கி, சுயாதீன ஆணைக்குழு முறைமையை மீள ஏற்படுத்தி, சட்டத்தின் ஆட்சியின் மேன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சிறிசேனவை நாம் விசேடமாக வேண்டுகிறோம்.
இந்த அதிகார ஆட்சிப் பீடத்தின் மாற்றம் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை அர்த்தமுள்ள பெறுபேறைத் தரவேண்டுமாயின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், ஊடக சுதந்திரம், ஆகியவற்றின் மீதான கெடுபிடிக் கட்டுப்பாடுகள் உடனடியாக நீக்கப்பட வேண்டும் எனக் கனேடிய தமிழர் பேரவை நம்புகின்றது. சர்வாதிகாரத்தை முறியடித்து, நம்பிக்கையை உருவாக்கும் மாற்றத்தை ஏற்படுத்துவற்காக பல்வேறுபட்ட கருத்துநிலைப்பாடுகளை கொண்ட அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்பட முடியுமானால், தமது மக்களின் அடித்தளத்தில் கிடக்கும் அபிலாஷைகளை – ஆதங்கங்களை – கவனித்துத் தீர்ப்பதற்காக அனைத்து சமூ கங்களும் அதேபோன்று ஐக் கியப்பட்டுச் செயற்பட முடியும் என கனேடிய தமிழர் பேரவை கருதுகின்றது. முன்னைய மனித உரிமை மீறல்கள் விடயத்தில் நீண்ட காலம் காத்துக் கிடக்கும் நீதியை நிலைநாட்டுவதற்கு இந்தப் புதிய ஆரம்பம் மூலம் கிட்டியிருக்கும் சந்தர்ப்பத்தை வாய்ப்பாகப் பயன்படுத்துவதற்கு கனேடிய தமிழர் பேரவை தொடர்ந்து சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றும். ஜனநாயக விழுமியங்கள் மற்றும் குடிமக்களுக்கான நியாயம், சமத்துவம், நீதி, கௌரவம், சுதந்திரம் ஆகியவை பேணப்படுகின்ற வகையில் ஒரு நிரந்தரத் தீர்வை எட்டுவதற்காக உழைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பணிக்கு எல்லா விதத்திலும் உதவுவதற்கு கனேடிய தமிழர் பேரவை தயாராக உள்ளது – என்று உள்ளது. (த)

# கடந்த காலத் தவறுகளை புதிய அரசு செய்யக்கூடாது

## இலங்கை ஜனாதிபதித் தேர்தல் குறித்துக் கருணாநிதி கருத்து

சென்னை.ஜன.10
கடந்த கால அரசுகள் செய்த தவறைப் புதிதாகப் பொறுப்பேற்கும் அரசு செய்யாமல் நடந்தவைகளுக்கு விசாரணை நடத்த வேண்டும் என தி.மு.க தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.
இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் தொடர்பில் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:–
இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசுக்குக் கிடைக் கப்பெற்றுள்ள வெற்றியால் இலங்கையின் வரலாறு மாற்றப் பட்டுள்ளது.
கடந்த கால அரசால் இலங்கையில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போரின் போது இடம்பெற்ற இனப் படுகொலைகள் ஆகியவற்றுக்கான விசாரணையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் புதிய அரசு மேற்கொள்ளவேண்டும்.
தேர்தலால் மாற்றியமைக்கப்பட்டுள்ள இலங்கையின் வரலாறு தமிழர்களுக்கு தீர்வைத் தரவேண்டும். கடந்த கால அரசுகள் செய்த தவறுகளைப் புதிய அரசு செய்யாமல் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும்– என்றார். (த–14)

# அனைத்து இனங்களையும் பாதுகாப்பார் மைத்திரிபால

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் நம்பிக்கை

கொழும்பு, ஜன.10
இலங்கையின் அனைத்துப் பிரஜைகளையும் அவர்களின் இன, மத வேறுபாடுகளைக் கருத்திற்கொள்ளாமல் புதிய ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பார் எனத் தாம் நம்புவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.
மனித உரிமைகள் விடயத்தில் கடந்த நிர்வாகத்தின் பின்னடைவுகளை மைத்திரிபால சிறிசேன சீராக்கவேண்டும் எனவும் பொறுப்புடைமையை ஊக்குவிக்கவும் வேண்டும் எனவும் அது கோரியுள்ளது. (த)

# கருத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள்; புதிய ஜனாதிபதி புதுவழி நடப்பாரா?

இலங்கை நாட்டின் ஏழாவது ஜனாதிபதியாக - நிறைவேற்று அதிகாரம் உள்ள தலைவராக - மைத்திரிபால சிறிசேன நேற்று மாலை வேளையில் பதவிப் பிரமாணம் செய்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், அடுத்த வேட்பாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கிடைத்த வாக்குகளைவிட, 4 லட்சத்து 49 ஆயிரத்து 72 மேலதிக வாக்குகளால் அவர் வெற்றி ஈட்டினார்.

தேர்தல் நாளுக்கு முன்னதாகவே, மைத்திரிபால அலை உயரத்தொடங்கியதை தென்னிலங்கைத் தகவல்கள் தெரிவித்தன.

தேர்தல்வாக்களிப்புநாளன்று, வடக்கிலும்கிழக்கிலும், தமிழ் வாக்காளர்களின் தெரிவு மைத்திரிபாலவாகவே இருந்தது. தேர்தல் வாக்களிப்பின் முடிவுகள் - புள்ளி விவரங்கள் - அதனை உறுதி செய்துள்ளன.

வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தேர்தல் மாவட்டங்களில் தமிழ் வாக்காளர்களின் வாக்குகள் மைத்திரிபால சிறிசேனவுக்கே மிக அதிக எண்ணிக்கையில் கிடைத்தன. கிழக்கிலும் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் மைத்திரிபாலவுக்கே அதிக வாக்குகள் கிடைத்தன.

தென்னிலங்கையின் அம்பாந்தோட்டை மாவட்டம் தவிர்ந்த, பல தேர்தல் மாவட்டங்களிலும் சிறிசேனவுக்கே அதிக எண்ணிக்கையான வாக்குகள் கிடைத்துள்ளன. வாக்களிப்பு முடிவுகள் அதனையே தொட்டுக்காட்டுகின்றன.

மொத்தத்தில் வடக்கு, கிழக்கு, மலையகம் வாழ் தமிழ் மக்களின் வாக்குகளே, புதிய ஜனாதிபதியின் வெற்றியை நிர்ணயித்தன எனலாம். இதற்கு முன்னர் ஆறு தடவைகள் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில், அவற்றில் வெற்றி ஈட்டியவர்கள் முழுக்க முழுக்கப் பெரும்பான்மை இன வாக்காளர்களின் பங்களிப்பினாலேயே பதவியைப் பற்றிக்கொள்ள இயன்றது.

ஆனால் நேற்று முன்தினம், கடந்த எட்டாம் திகதி, வியாழனன்று இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், மைத்திரிபால சிறிசேனாவின் வெற்றிக்கு வடக்கு, கிழக்கு, மலையகத்தமிழ் மக்களின் வாக்குகளே உதவின என்பது வெள்ளிடைமலை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி, ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை, உரிமைகளை வழங்குவதற்கு உதவுமா என்பதனைப் பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும்.

இந்த நாட்டின் முந்தைய ஜனாதிபதிகள், தமிழர்கள் கேட்ட நியாயமான, நீதியான அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு, அரைகுறை மனதோடு தானும் முன்வந்ததில்லை.

தேன் ஒழுகப்பேசி, தமிழ் வாக்காளர்களிடம் இருந்து வாக்குகளை வாங்கிவிட்டு, ஆட்சிக் கதிரையில் ஏறியதும் அதனை மறந்து உனக்கும் பெப்பே, உன் அப்பனுக்கும் பெப்பே என்று தகிடுதத்தம் காட்டிப் போந்தனர். இதுவே இந்த நாட்டின் வரலாறாகத் தொடர்கிறது!

ஆனால், நாட்டின் புதிய ஜனாதிபதி, முந்தியவர்களின் தடம்பதிக்க - வழிநடக்க - முனையக்கூடாது.

வடக்கு, கிழக்கு, மலையகம் வாழ் தமிழ் மக்களின் வாக்குகளே, நாட்டின் அதிஉயர் பதவிக்குத் தம்மை ஏற்றி வைத்துள்ளன என்பதனை உய்த்துணர வேண்டும். அதனைத் திறனுடன் செயலாக்க, நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு அர்ப்பணிப்புடன், உளமார்ந்து செயற்பட வேண்டும்.

தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய அரசியல், ஆட்சி உரிமைகளை வழங்குவது தொடர்பில், வெறும் வாய் வேதாந்தம் பேசிக் காலத்தைக் கடத்துவதற்கு எண்ணலாகாது.

முன்னைய ஆட்சித் தலைவர்கள் போன்று, அரைகுறைத் தீர்வுகளைக் காட்டி, தமிழர் உரிமைகளை மறைமுகமாகக் கபளீகரம் செய்ய மனதாலும் நினைக்கக் கூடாது. இது தொடர்பில், நன்றே செய்வீர், அதனை இன்றே செய்வீர் என்பதனை வெளிப்படுத்த வேண்டும். அத்தோடு தரித்துக் கொள்ளாமல் செயலிலும் காட்ட வேண்டும்.

தமிழ் மக்கள் சார்பான முதல் நாள் கோரிக்கையாக இதனைக் கணித்து, கவனம் எடுத்து நடைமுறையில் கொள்வீர்களா ஜனாதிபதி அவர்களே!

# அதிரடியாக மாற்றத்தை ஏற்படுத்திய தமிழ் வாக்காளர்கள்

சேரலாதன்



மஹிந்த ராஜபக்ஷவை பதவியிலிருந்து அகற்றியதன் மூலமாக இலங்கை மக்கள் குறிப்பாகத் தமிழர்கள், தெளிவான செய்தியொன்றை இந்த நாட்டின் அரசியல்வாதிகளுக்குக் கூறியுள்ளனர். சகல நிறைவேற்று அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டு ஒரு சர்வாதிகாரி போன்று வலம் வந்த முன்னாள் ஜனாதிபதி இந்த நாட்டு மக்களின் தலைவிதியைத் தாம் ஒருவரே தீர்மானித்து வந்தார். நீதித்துறைகூட அவரது கரங்களால் சிறைப்பிடிக்கப்பட்ட நிலையில்தான் காணப்பட்டது. அவர் மூன்றாவது தடவையும் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடலாமென்பதை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு அறிக்கை அளித்ததை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியொன்றும் மக்களிடம் காணப்படவில்லை.

அரசுக்கு வேண்டியவர்கள் பெரிய குற்றங்களைப் புரிந்துவிட்டு தண்டனை எதுவுமின்றி சுதந்திரமாக உலாவித் திரிந்த நிலைகூட முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சியில்தான் நிகழ்ந்திருக்கிறது.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக இந்த நாட்டின் இரண்டாவது பெரிய இனமாகத் திகழும் தமிழ் மக்களின் வாழ்வு அறவே சிதைக்கப்பட்டதும் மஹிந்தவின் ஆட்சியில்தான் – தமிழர் பிரதேசங்களில் பௌத்த ஆலயங்கள் வகைதொகையின்றி அமைக்கப்பட்டுள்ளதுடன் சிங்களக் குடியேற்றங்களும் பரவலாக நிறுவப்பட்டு வந்துள்ளன. தமிழர்கள் தமக்கெனத் தாயகம் ஒன்று உள்ளது என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவுக்கு மஹிந்தரின் ஆட்சி அட்டூழியங்களைப் புரிந்துள்ளது.

இவற்றையெல்லாம் வெறுமனே பார்த்துக் கொண்டு கண்ணீர் வடிப்பதைத் தவிர தமிழர்களால் வேறு எதையுமே செய்யமுடியவில்லை.

தமிழர் பகுதிகளில் படையினர் குவிக்கப்பட்டுள்ள நிலையில் மக்களின் இயல்பு வாழ்க்கை அச்சம் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. எந்த விடயத்திலும் படையினர் மூக்கை நுழைக்கும் நிலை உள்ளதால் சுதந்திரம் என்பது இங்குள்ள மக்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளது.

அசைக்க முடியாதவர், தோற்கடிக்க முடியாதவர் என்ற பெருமைகளைக் கொண்டிருந்த மஹிந்த தாம் விரித்த வலையில் தாமே சிக்குவாரென்பதை சிறிதும் எதிர்பார்த்திருக்க மாட்டார். சோதிடர்களின் ஆலோசனையின் பிரகாரம், உரியவேளைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பதாகவே ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அதில் தோல்வி காண வேண்டுமென்பது அவரது தலைவிதியென்பதைத் தவிர வேறொன்றும் இல்லை. அகிம்சைப் போராட்டங்களாலும் ஆயுதப் போராட்டங்களாலும் வெற்றி காண முடியாது தோற்றுப் போன இனமாகக் கருதப்பட்ட தமிழர்கள் தமது வாக்குகளை ஆயுதமாகக் கொண்டு பெரு வெற்றியைப் பெற்றுவிட்டார்கள். ஆம்... மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியைத் தீர்மானிக்கும் பெரும் சக்தியாக அவர்கள் மாறிவிட்டனர்.

மஹிந்தரின் தோல்விக்குத் தமிழர்களின் வாக்குப் பலமே முக்கிய காரணமாக அமைந்துவிட்டது.

> **தோற்றுப் போன இனமாகக் கருதப்பட்ட தமிழர்கள் தமது வாக்குகளை ஆயுதமாகக் கொண்டு பெரு வெற்றியைப் பெற்று விட்டார்கள். ஆம்... மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியைத் தீர்மானிக்கும் பெரும் சக்தியாக அவர்கள் மாறிவிட்டனர். மஹிந்தரின் தோல்விக்குத் தமிழர்களின் வாக்குப் பலமே முக்கிய காரணமாக அமைந்து விட்டது. இலங்கை அரசியலில் கிள்ளுக் கீரையாகக் கருதப்பட்ட தமிழர்கள் இமயம் போன்று உயர்ந்து நிற்கின்றனர்.**

இலங்கை அரசியலில் கிள்ளுக் கீரையாகக் கருதப்பட்ட தமிழர்கள் இமயம் போன்று உயர்ந்து நிற்கின்றனர். ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற அவர்களின் கனவு நனவாகிவிட்டது.

மைத்திரிபால சிறிசேனவும் ஒரு சிங்கள பௌத்தர் என்ற வகையில் அவரிடமிருந்து தமிழர்கள் பெரிதாக எதிர்பார்க்க முடியாது என்றாலும், அவர் மீது நம்பிக்கை வைத்து தமிழர்கள் தமது வாக்குகளை அவருக்கு அள்ளிக் கொடுத்துள்ளனர்.

புதிய ஜனாதிபதி தாமும் ஒரு சராசரி பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த தலைவர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுப்பாராயின் அவரது பெயர் வரலாற்றில் பொறிக்கப்பட்டுவிடும். அந்த நாளை தமிழர்கள் ஆவலுடன்–நம்பிக்கையுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

## நாடளாவிய ரீதியில்

2010 - 6,015,934


மஹிந்த ராஜபக்ஷ



2015 - 5,768,090

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 10,393,613 | 12,123,452 |
| நிராகரிக்கப்பட்டது | 101,838 | 140,925 |
| வாக்களிப்பு | 10, 495,451 | 12,264,377 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 14,088,500 | 15,044,490 |

சரத் பொன்சேகா



2010 - 4,173,185

மைத்திரிபால சிறிசேன

2015 - 6,217,162

## அநுராதபுரம் தேர்தல் மாவட்டம்

2010 - 298,448

மஹிந்த ராஜபக்ஷ



2015 - 281,161

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 450,038 | 524,633 |
| நிராகரிக்கப்பட்டது | 3,785 | 4,500 |
| வாக்களிப்பு | 453,823 | 529,133 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 579,261 | 636,733 |

சரத் பொன்சேகா



2010 - 143,761

மைத்திரிபால சிறிசேன

2015 - 238,407

## பதுளை தேர்தல் மாவட்டம்

2010 - 237,579

மஹிந்த ராஜபக்ஷ



2015 - 249,243

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 446,294 | 507,070 |
| நிராகரிக்கப்பட்டது | 6,083 | 7,871 |
| வாக்களிப்பு | 452,377 | 514,941 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 574,814 | 620,486 |



2010 - 198,835

மைத்திரிபால சிறிசேன

2015 - 249,524

## இரத்தினபுரி தேர்தல் மாவட்டம்

2010 - 377,734

மஹிந்த ராஜபக்ஷ



2015 - 379,053

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 592,426 | 680,084 |
| நிராகரிக்கப்பட்டது | 4,430 | 7,656 |
| வாக்களிப்பு | 596,856 | 687,740 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 734,651 | 810,082 |



2010 - 203,566

மைத்திரிபால சிறிசேன

2015 - 292, 514

## களுத்துறை தேர்தல் மாவட்டம்

2010 - 412,562

மஹிந்த ராஜபக்ஷ



2015 - 395,890

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 654,249 | 751,984 |
| நிராகரிக்கப்பட்டது | 4,541 | 8,381 |
| வாக்களிப்பு | 658,790 | 760,365 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 1,183,649 | 897,349 |



2010 - 231,807

மைத்திரிபால சிறிசேன

2015 - 349,404

## கேகாலை தேர்தல் மாவட்டம்

2010 - 296,639

மஹிந்த ராஜபக்ஷ



2015 - 278,130

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 479,964 | 536,771 |
| நிராகரிக்கப்பட்டது | 3,604 | 6,515 |
| வாக்களிப்பு | 483,568 | 543,286 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 613,938 | 649,878 |

சரத் பொன்சேகா



2010 - 174,877

மைத்திரிபால சிறிசேன

2015 - 252,533

## குருநாகல் தேர்தல் மாவட்டம்

2010 - 582,784

மஹிந்த ராஜபக்ஷ



2015 - 556,868

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 923,893 | 1,041,624 |
| நிராகரிக்கப்பட்டது | 6,644 | 9,285 |
| வாக்களிப்பு | 930,537 | 1,050,909 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 1,183,649 | 1,266,443 |



2010 - 327,594

மைத்திரிபால சிறிசேன

2015 - 476,602

## மொனராகலை தேர்தல் மாவட்டம்

2010 - 158,435

மஹிந்த ராஜபக்ஷ



2015 - 173,745

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 229,584 | 281,116 |
| நிராகரிக்கப்பட்டது | 2,272 | 3,449 |
| வாக்களிப்பு | 231,856 | 284,565 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 300,642 | 339,797 |

சரத் பொன்சேகா



2010 - 66,803

மைத்திரிபால சிறிசேன

2015 - 105,276

## பொலநறுவை தேர்தல் மாவட்டம்


2010 - 144,889

மஹிந்த ராஜபக்ஷ



2015 - 105,640

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 223,175 | 255,996 |
| நிராகரிக்கப்பட்டது | 1,472 | 1,790 |
| வாக்களிப்பு | 224,647 | 257,786 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 280,337 | 307,125 |



2010 - 75,026

மைத்திரிபால சிறிசேன

2015 - 147,974

## புத்தளம் தேர்தல் மாவட்டம்

2010 - 201,981

மஹிந்த ராஜபக்ஷ



2015 - 197,751

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 344,113 | 403,850 |
| நிராகரிக்கப்பட்டது | 2,886 | 4,300 |
| வாக்களிப்பு | 346,999 | 408,150 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 495,575 | 553,009 |



2010 - 136,233

மைத்திரிபால சிறிசேன

2015 - 202,073

## கம்பஹா தேர்தல் மாவட்டம்

2010 - 718,716

மஹிந்த ராஜபக்ஷ



2015 - 664,347

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 1,165,648 | 1,342,496 |
| நிராகரிக்கப்பட்டது | 8,960 | 14,647 |
| வாக்களிப்பு | 1,174,608 | 1,357,143 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 1,474,464 | 1,637,537 |



2010 - 434,506

மைத்திரிபால சிறிசேன

2015 - 669,007

## மாத்தறை தேர்தல் மாவட்டம்

2010 - 296,155
2015 - 297,823

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 451,929 | 515,150 |
| நிராகரிக்கப்பட்டது | 3,025 | 4,891 |
| வாக்களிப்பு | 454,954 | 520,041 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 578,858 | 623,818 |

2010 - 148,510
2015 - 212,435

## காலி தேர்தல் மாவட்டம்

2010 - 386,971
2015 - 377,126

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 607,621 | 677,811 |
| நிராகரிக்கப்பட்டது | 3,765 | 6,516 |
| வாக்களிப்பு | 611,386 | 684,327 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 761,815 | 819,666 |

2010 - 211,633
2015 - 293,994

## மாத்தளை தேர்தல் மாவட்டம்

2010 - 157,953
2015 - 158,880

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 264,419 | 309,022 |
| நிராகரிக்கப்பட்டது | 2,666 | 3,653 |
| வாக்களிப்பு | 267,085 | 312,675 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 342,684 | 379,675 |

2010 - 100,513
2015 - 145,928

## கண்டி தேர்தல் மாவட்டம்

2010 - 406,636
2015 - 350,863

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 750,786 | 808,991 |
| நிராகரிக்கப்பட்டது | 8,700 | 10,514 |
| வாக்களிப்பு | 759,486 | 826,505 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 970,456 | 102,8915 |

2010 - 329,492
2015 - 448,522

## வன்னி தேர்தல் மாவட்டம்

2010 - 28,740
2015 - 34,377

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 105,252 | 180,225 |
| நிராகரிக்கப்பட்டது | 2,428 | 3,416 |
| வாக்களிப்பு | 107,680 | 183,641 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 266,975 | 253,058 |

2010 - 70,367
2015 - 141,417

## யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்

2010 - 44,154
2015 - 74,454

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 178,369 | 340,751 |
| நிராகரிக்கப்பட்டது | 6,763 | 10,038 |
| வாக்களிப்பு | 185,132 | 350,789 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 721,359 | 529,239 |

2010 - 113,877
2015 - 253,574

## திருகோணமலை தேர்தல் மாவட்டம்

2010 - 69,752
2015 - 52,111

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 162,072 | 195,356 |
| நிராகரிக்கப்பட்டது | 2,432 | 1,805 |
| வாக்களிப்பு | 164,504 | 197,161 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 241,133 | 256,852 |

2010 - 87,661
2015 - 140,338

## அம்பாறை தேர்தல் மாவட்டம்

2010 - 146,912
2015 - 121,027

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 306,562 | 357,817 |
| நிராகரிக்கப்பட்டது | 2,912 | 2,625 |
| வாக்களிப்பு | 309,474 | 360,442 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 420,835 | 465,757 |

2010 - 153,105
2015 - 233,360

## மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம்

2010 - 55,663
2015 - 41,631

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 211,891 | 256,586 |
| நிராகரிக்கப்பட்டது | 4,396 | 2,580 |
| வாக்களிப்பு | 216,287 | 259,166 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 333,644 | 365,167 |

2010 - 146,057
2015 - 209,422

## நுவரெலியா தேர்தல் மாவட்டம்

2010 - 151,604
2015 - 145,339

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 346,382 | 426,766 |
| நிராகரிக்கப்பட்டது | 6,462 | 7,329 |
| வாக்களிப்பு | 352,844 | 434,095 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 457,137 | 534,130 |

2010 - 180,604
2015 - 272,605

## கொழும்பு தேர்தல் மாவட்டம்

2010 - 614,740
2015 - 563,614

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 1,161,382 | 1,296,360 |
| நிராகரிக்கப்பட்டது | 11,394 | 15,334 |
| வாக்களிப்பு | 1,172,776 | 1,311,694 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 1,52,854 | 1,586,598 |

2010 - 533,022
2015 - 725,073

## அம்பாந்தோட்டை தேர்தல் மாவட்டம்

2010 - 226,887
2015 - 243,295

| | 2010 | 2015 |
|---|---|---|
| செல்லுபடியானது | 337,564 | 386,076 |
| நிராகரிக்கப்பட்டது | 2,218 | 3,351 |
| வாக்களிப்பு | 339,782 | 389,427 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | 421,186 | 462,911 |

2010 - 105,336
2015 - 138,708

தை திங்கள் பொங்கல் திருநாளில்

# புத்தாண்டு தனி சிறப்பு மலர்



பதிவுகளுக்கு 11 ஆம் திகதி வரையே அவகாசம்!

## 100 பக்கங்கள்

விலை ரூ.100

- வடக்கின் முன்னணி எழுத்தாளர்களது சிறுகதைகள்.
- தமிழகத்தின் சிறந்த சிறுகதைகள் சில,
- முன்னணி ஈழத் தமிழ் கவிஞர்களின் கவிதைகள்.
- செவ்வாய் தோஷத்துக்கு என்ன பரிகாரம்?
- அதிர்ஷ்டம் தரும் நவரத்தினங்கள்.
- பெண்ணிய கட்டுரைகள்
- அரசியல் அலசல்கள்
- அரசியல் பேட்டிகள்
- விளையாட்டு
- சினிமா பேட்டிகள்
- தமிழின் பெருமை.
- விளக்குப் பூசை விரதங்களின் மகிமை.
- புத்தாண்டு பலன்கள்.
- மனையடி சாஸ்திரம்.
- மச்சங்களின் பலன்கள்.
- கைரேகை பலன்கள்.
- உலக அரசியல் அலசல்கள்
- காசி ஆனந்தன் கவிதை.
- அறிவியல் புதினங்கள்.
- நகைச்சுவை விடயங்கள்.

இன்னும் பல சுவாரஸ்ய அம்சங்களுடன்!



சிறப்பிழுக்கான உங்கள் பதிவுகளுக்கு 'உதயன்' முகவர்களை உடனே நாடுங்கள்.!

# பதிவுகள்



வாக்குச்சாவடியில் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிக்கு பொலிஸாரால் வழங்கப்பட்ட மரியாதை



கொழும்பு இராஜகிரியவிலுள்ள வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்ற புதுமணத் தம்பதிகள்



வாக்குச் சாவடியில் சுயேச்சை வேட்பாளர் ஆர்.ஏ.சிறிசேனவுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



மன்னாரில் வாக்குச் சாவடிகளில் இருந்து வாக்கு எண்ணும் நிலையத்துக்கு எடுத்து வரப்பட்ட வாக்குப்பெட்டிகள்



நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் அவரது பாரியார் வாக்களித்துவிட்டு வந்தபோது...





புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேனவுக்கு வாழ்த்துத் தெரிவித்து வடக்கு-கிழக்கு தமிழர் தங்களின் பூர்வீக நிலப்பரப்பு எங்கும் வெடி கொளுத்தி தமது பெருமகிழ்ச்சியைக் கொண்டாடினர்.

# யாழ். குடாநாட்டு விவசாயிகள் மரக்கறிச்செய்கையில் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். குடாநாட்டில் விவசாயிகள் மரக்கறிச் செய்கையில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அண்மையில் பெய்த மழையால் மரக்கறிப்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் மரக்கறிச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் மரக்கறி வகைகளுக்கு பெரும் பற்றாக் குறையும், தட் டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. அதனை அடுத்து விவசாயிகள் தமது விவசாய நிலங்களைச் சீர் செய்து மரக்கறிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கத்தரி, பயிற்றை, புடோல், தக்காளி, பூசணி, கீரை, கரட் போன்ற மரக்கறிப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த மரக்கறி வகைகள் அடுத்த மாதமளவில் அறுவடை செய்து சந்தைகளுக்கு வந்து சேர்ந்ததும் அவற்றின் விலைகள் சரியலாம் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேசமயம் தற்போது மரக்கறி வகைகளுக்கு ஏற்பட்ட பற்றாக்குறை, தட்டுப்பாட்டால் அவற்றின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்தே காணப்படுகின்றன.

**கத்தரி, பயிற்றை, புடோல், தக்காளி, பூசணி, கீரை, கரட் போன்ற மரக்கறிப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.**

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார் மடம், சங்கானை, சாவகச்சேரி போன்ற சந்தைகளில் மரக்கறி வகைகள் மிகக் குறைவாக வந்து சேர்வதால் அவை உடனடியாகவே விற்றுத் தீர்ந்து விடுகின்றன. (வ–17)

## விசேட பஜனை

யாழ்ப்பாணம், ஜன.10

மூளாய் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட பஜனை மற்றும் பூஜைகள் நடைபெற இருப்பதால் ஐயப்ப பக்தர்கள் அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மார்கழி மாத சனிக்கிழமையில் பஞ்சமி திதி உத்திர நட்சத்திரத்தில் ஐயப்பன் பூமியில் வந்துதித்த நாளாகும்.

இந்த வருடம் உத்திரம் அடுத்த நாள் வருவதால் இந்த சனிக்கிழமை விசேட நாளாகக் கருதப்படுகிறது. (வ)

## வீதி விபத்தில் ஒருவர் காயம்

தென்மராட்சி, ஜன.10

ஏ – 9 வீதியில் வந்த இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரி மருத்துவமனைக்கு அருகில் இடம்பெற்றது. காயமடைந்த மிருசுவில் உசனைச் சேர்ந்த பழனிவேல் விஜயரூபன் (வயது – 30) என்பவர் சாவகச்சேரி மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ–9)

## உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் நெடுந்தீவு துறைமுக பகுதியில் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.10

நெடுந்தீவுப் பிரதேச சபையால் துறைமுகப்பகுதியில் அமைந்துள்ள உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையமும் காட்சியகமும் நேற்று முன்தினம் புதன் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் எஸ்.பி.அருளப்பு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பி.சீவரட்ணம் நிலையத்தைத் திறந்து வைத்தார். தேநீர் விற்பனைக்கூடம் பிரதேச சபைத் தலைவரால் திறந்து வைக்கப் பட்டது.(வ–7)

# சாவகச்சேரியில் தரித்து நிற்குமா? 'இன்ரசிற்றி' ரயில்

தென்மராட்சி, ஜன.10

சாவகச்சேரியில் உள்ள ரயில் நிலையத்தில் நகரங்களுக்கு இடையிலான ரயில் தரித்துச் செல்ல உரிய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் 'இன்ரசிற்றி' சேவை ரயில்கள் நாவற்குழி, கொடிகாமம் ரயில் நிலையங்களில் தரித்துச் செல்கின்றன. ஆனால் சாவகச்சேரி ரயில் நிலையத்தில் நிறுத்தப்படுவதில்லை. சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் அரச திணைக்கள அலுவலகங்கள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் போன்றவை காணப்படுவதுடன் யாழ்ப்பாணத்துக்கு அடுத்ததாக அடர்த்தி கூடிய சனத்தொகை கொண்ட பிரதேசமாக சாவகச் சேரி காணப்படுகிறது. நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் 20 ஆயிரத்துக்குமேற்பட்ட சனத்தொகையைக்கொண்ட பிரதேசம் என்பதுடன் நகரசபை எல் லைக்கு வெளியே உள்ள மட்டுவில் சரசாலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களும் சாவகச்சேரி ரயில் நிலையத்திலிருந்து பயணிக்க வாய்ப்புள்ள போதிலும் அந்தப் பகுதிகளைச்சேர்ந்த மக்கள் கொடிகாமம் ரயில் நிலையத்திலிருந்தே போக்குவரத்துச் செய்ய வேண்டியுள்ளது.

அந்தப்பகுதி மக்கள் ரயில் ஆசனப் பதிவுக்காக யாழ்ப்பாணம் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர். இதனால் நகர் சேர் கடுகதி ர்யில் சேவையை சாவகச்சேரியில் தரித்துச் செல்ல நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுள்ளனர். (வ–9)



ஜேர்மனியைச் சேர்ந்த சசிகரன் என்பவரால் தனது புதல்விகளான குயிலினி (வயது–6) தமிழினி (வயது–1) ஆகியோரது பிறந்த தினங்களை முன்னிட்டு 'உதவும் இதயங்கள்' அமைப்பினூடாக புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தந்தையை இழந்த இரு பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட உதவிகளை அதன் இலங்கை இணைப்பாளர் ச.சஜீவன் (வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுத் தலைவர்) எடுத்துச்சென்று சேர்ப்பித்துள்ளார். (வ)



## திருத்தப்பட்ட மகிழங்கேணி வீதி

சாவகச்சேரி நகரசபையின் கோயிற்குடியிருப்பு வட்டாரத்தில் உள்ள மகிழங்கேணி வீதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு அந்தப் பகுதி மக்களிடம் கையளிக்கப்பட்டது. நகரசபை உறுப்பினர் த.சுதர்சனின் கடந்த வருட (2014) நிதி ஒதுக்கீட்டில் எட்டு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த வீதியின் வேலைகள் கடந்த மாதம் (டிசெம்பர்) நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நகரசபைத் தலைவரின் வட்டாரம் என்பதால் அவரது நேரடி கண்காணிப்பில் வேலைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.(வ–9)

## யாழ்.நகரை அண்டிய கரையோர பகுதிகளில் நுளம்புப் பெருக்கம்

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்.நகரை அண்டிய கரையோரப் பகுதிகளில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மழைபெய்து ஓய்ந்ததைஅடுத்து இந்த நுளம்பு பெருக்கம் மிக மிக அதிகரித்திருப்பதாக கரையோரப் பகுதி மக்கள் தெரிவித்தனர். குறிப்பாக மாலை வேளைகளிலேயே நுளம்புகள் சூழ்ந்து தொல்லைகொடுப்பதாக அந்த மக்கள்தெரிவித்தனர். பாஷையூர், குருநகர், நாவாந்துறை, கொட்டடி, கொழும்புத்துறை போன்ற பகுதிகளில் இந்தநுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.



குறிப்பாக கரையோரப் பகுதியில் உள்ள கழிவுநீர் வழிந்தோடும் வடிகால்வாய்கள்சீரான முறையில் துப்புரவு செய்யப்படாததால்அவற்றில்இருந்துநுளம்புக்குடம்பிகளின் பெருக்கம் அதிகரித்தும் காணப்படுகின்றது.

அதனைவிட மழைவெள்ளம் தேங்கி நிற்கும் இடங்கள் மற்றும் கழிவு பொருள்கள் கொட்டப்படும் பகுதிகளில் இருந்தும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் தெரிவித்தனர். நுளம்புக்கடியால் மக்கள் பாதிக்கப்படுவதோடு அவற்றால் நோய்த் தாக்கமும் ஏற்படலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டது. (வ–17)

# உலகச் செய்திகள்



## பிரிட்டனுக்கு வந்தது மிகப் பெரிய கப்பல்

லண்டன், ஜன. 10

நான்கு காற்பந்தாட்ட மைதானத்தின் அளவுக்கு பரப்பளவு கொண்ட 1314 அடி நீளமான உலகின் பிரமாண்டமான கப்பல் பிரிட்டனுக்கு நேற்று வந்து சேர்ந்துள்ளது.

சி.எஸ்.சி.எல். குளோப் என்று பெயர் கொண்ட அந்தக் கப்பல் சீனாவின் ஷாங்காய் துறைமுகத்திலிருந்து கடந்த டிசெம்பர் மாதம் தனது முதல் பயணத்தை ஆரம்பித்தது.

தென்கொரியாவில் உள்ள ஹூண்டாய் ஹெவி இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட அந்தக் கப்பல் 1,84000 தொன் நிறை கொண்டது. ஐரோப்பிய ஒன்றியத்திலேயே மிக உயரமான ஷார்டின் கட்டடத்தின் உயரம் 1014 அடி, ஆனால் இந்தக் கப்பலோ 1314 அடி நீளம் கொண்டது.

சீனாவிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்து 11067 கடல் மைல்களைப் பயணித்து மலேசியாவின் கேலங் துறைமுகத்துக்குச் சென்று சரக்குகளை ஏற்றிக் கொண்டு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 30 குழுவினருடன் பிரிட்டனின் பெலிக்ஸ்டோ துறைமுகத்துக்கு அந்தக் கப்பல் வந்து சேர்ந்துள்ளது.

பெலிக்ஸ்டோ துறைமுகத்துக்கு கப்பல் வந்து சேர்ந்த நாள் மிகவும் அற்புதமான நாளாகும். என்று பெலிக்ஸ்டோ துறைமுகத்தின் தலைமை நிர்வாகி கிளம்ன்ஸ் செங் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)

## மனித குண்டுத் தாக்குதல்; ஈ·ராக்கில் 23 பேர் சாவு



பாக்தாத், ஜன. 10

ஈராக்கில் தீவிரவாதிகள் மேற்கொண்ட மனித வெடிகுண்டுத் தாக்குதல்களில் மசூதியில் இருந்து வெளியே வந்த ஷியா பிரிவினர் உட்பட 23 பேர் சாவடைந்துள்ளார்கள்.

வெடிகுண்டு நிரப்பிய காரைச் செலுத்தி வந்த மனித வெடிகுண்டுப் படைத் தீவிரவாதி, பாக்தாத் அருகே உள்ள யூசிபியா நகரில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடி மீது காரை மோதி வெடிக்கச் செய்ததில் 3 பொலிஸ்காரர்களும், 4 பொது மக்களும் சாவடைந்துள்ளனர். 21 பேர் காயமடைந்துள்ளனர்.

அதன்பின்னர், சமாரா அருகே உள்ள சோதனைச்சாவடி மீது நடத்தப்பட்ட மனித வெடிகுண்டுப்படைத் தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேற்கு பாக்தாத்தில் தொழுகைக்குப் பிறகு மசூதியில் இருந்து வெளியேறிய ஷியா பிரிவினரை குறிவைத்து மனித வெடிகுண்டுப் படைத் தீவிரவாதி தாக்குதல் மேற்கொண்டுள்ளார். அதில், 8 பேர் கொல்லப்பட்டனர். 16 பேர் காயமடைந்துள்ளனர். (ஒ–ரி)

## விமான விபத்துக்களிலிருந்து பயணிகளைக் காக்க வழிமுறை

விமானங்கள் விபத்துக்குள்ளாவதைத் தடுக்கும் வகையில், 'ஓட்டோமட்ரிக் டிராக்கிங்' வசதியை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு விமானப் பயணிகளுக்குச் செய்பவர்களுக்கு சோகமான ஆண்டாகவே இருந்துள்ளது.




மலேசியா விமானம் மாயமானது, சுட்டு வீழ்த்தப்பட்டது, எயார் ஏசியா விமானம் விபத்தில் சிக்கியது என விமான விபத்துக்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தன.

இந்த நிலையில் இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணும் வகையில் கட்டார் எயார்வேய்ஸ் புதிய முறை ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது.

விமானம் புறப்பட்டதிலிருந்து அது சென்றடைய வேண்டிய இடத்தை அடையும் வரை தானாகவே தனது இருப்பிடத்தைத் தெரிவிக்கும் 'ஓட்டோமட்டிக் டிராக்கிங்' என்ற வசதியை விமானத்தில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் விமானங்கள் பயணிக்கும் இடத்தை மிக எளிதாகத் தெரிந்து கொள்ள முடியும் என நம்பப்படுகிறது.

## சாட் நாட்டில் 3,000 பேர் தஞ்சம்



அபுஜா, ஜன. 10

நைஜீரியாவில் போகோ ஹராம் பயங்கரவாதிகளின் தாக்குதலில் இருந்து தப்பி, 3,000 பேர் தமது நாட்டுக்குள் தஞ்சமடைந்துள்ளதாக மத்திய ஆபிரிக்க நாடான சாட் குடியரசின் பிரதமர் கால்ஸ்பே பாஹிமி டூபெட் தெரிவித்துள்ளார்.

அதுகுறித்து, தலைநகர் அன்ஜாமேனாவில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவிக்கையில், நைஜீரியாவையொட்டிய சாட் ஏரி பகுதியிலிருந்து கடந்த மாத மத்தியிலிருந்து நைஜீரிய அகதிகள் அதிகளவில் இடம்பெயர ஆரம்பித்துள்ளனர்.

இதுவரை 3,000 நைஜீரியர்களும், சாட் நாட்டிலிருந்து அயல்நாடுகளுக்குச் சென்றிருந்த 543 பேரும் போகோ ஹராம் அமைப்பினரின் தாக்குதல்களுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். அதிகமாக அகதிகள் குவியும் நிலையில், உரிய நடவடிக்கை மேற்கொள்ளாதிருந்தால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும் அபாயம் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் பாதுகாப்பு, மனித நேய உதவிகள் ஆகிய இரு பிரச்சினைகளை சமாளிக்க வேண்டிய நிலைக்கு தமது அரசு தள்ளப்பட்டுள்ளதாகவும் தற்போது நோய்த்தொற்று அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், உலக நாடுகள் உடனடியாக தமக்கு உதவ வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)





பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்

- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிநெறிகள் (வார, வார இறுதி நாட்கள்)
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- இரண்டு தவணைக் கட்டண முறைகள் எங்கள் யாழ்ப்பாணக் கிளையில்
- வயதுவந்த மாணவர்களுக்கு மேற்கோள் நூலகத்திற்கு இலவச அங்கத்துவம்.

ஜனவரி மாதம் ஆரம்பிக்கும் பயிற்சிநெறிக்கு தற்போது பதிவு செய்யவும்

நான் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள முடியும்?

- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு
  வயதுவந்தவர்களுக்கு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அடையாள அட்டை/கடவுச்சீட்டு
  பிள்ளைகளுக்கு(16-15 வயதிற்கு உட்பட்டோர்களுக்கு) உங்கள் பிள்ளையின் பிறப்புச்சான்றிதழ்
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 800

பிரிட்டிஷ் கவுன்சில், 70 ரக்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: (021) 7521521
மின்னஞ்சல்: info.lk@britishcouncil.org

அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை 0900 - 1800

நாம் மேலும் கொழும்பிலும் கண்டியிலும்

www.britishcouncil.lk



இந்தியாவின் அரியானா மாநிலத்தில் குரங்கொன்று பெண் குழந்தையொன்றைத் தாய் போன்று பாதுகாத்துப் பராமரித்து வருகிறது.

# பிரான்ஸில் தீவிரவாதிகளைக் கைது செய்யும் பணியில் 88,000 படையினர்

பாரிஸ், ஜன. 10

பிரான்ஸில் சார்லி எப்டோ பத்திரிகை மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து பிரான்ஸில் தாக்குதல்கள் நடைபெற்ற வண்ணமுள்ளன. இவ்வாறான தீவிரவாத தாக்குதல்களை மேற்கொண்டு வரும் தீவிரவாதிகளைக் கைது செய்ய 88,000 படையினரும் பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



அவர்களில் பலர் பாரிஸ் மற்றும் பிக்கார்டி பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இந்தப் பகுதிகளில்தான் தாக்குதல் மேற்கொண்டவர்கள் பலர் ஒளிந்திருப்பதாக நம்பப்படுகிறது என்று உள்துறை அமைச்சர் பெர்னார்ட் காசென்வ்யு கூறியுள்ளார். தீவிரவாதிகளைத் தேடும் பணியில் விமானங்களும் பயன்படுத்தப்படுவதாகவும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் லாங்போன் என்ற கிராமத்தில் வீடு வீடாகத் தேடுதல் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்த உள்துறை அமைச்சர் காசன்வெயு,, நாட்டில் பல்வேறு மசூதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டித்துள்ளார். மேலும் அந்தத் தாக்குதல்களைக் கண்டித்து பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

# தீவிரவாதிகளின் கோரத்தாண்டவம்


## நைஜீரியாவில் 100பேர் சாவு



அபுஜா, ஜன. 10

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோ ஹாரம் தீவிரவாதிகளின் அட்டூழியங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. வடகிழக்கில் உள்ள போர்னோ மாகாணத்தில் பாகா நகரிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கடந்த 2 நாள்களாக அவர்கள் பொதுமக்கள் மீது கடும் தாக்குதல் மேற்கொண்டு வருகின்றனர். அந்தப்பகுதியை ஆக்கிரமித்த தீவிரவாதிகள் பாகா நகரில் புகுந்து பொது மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். அதில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சாவடைந்துள்ளனர். அதனால் வீதிகளில் பிணங்கள் சிதறிக் கிடக்கின்றன.

இவை தவிர பாகாவில் வீடுகள் மற்றும் கட்டடங்களை தீவிரவாதிகள் தீ வைத்து எரித்துள்ளனர். அதனைச் சுற்றியுள்ள 16 கிராமங்களும் தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. அங்கிருந்த மக்கள் உயிர்பிழைத்தால் போதும் என்ற எண்ணத்தில் குடும்பங்களுடன் வெளியேறி விட்டனர். அதனால் அந்த இடத்தில் மயான அமைதி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.. கடந்த ஆண்டில் மட்டும் நைஜீரியாவில் 10 ஆயிரம் பேரை தீவிரவாதிகள் கொன்று குவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)



# இயற்கையாகவே மனிதர்களை மிதக்கச் செய்யும் சாக்கடல்

இஸ்ரேல்– ஜோர்டான் எல்லையில் மத்திய தரைக்கடலுடன் சேர்ந்திருக்கும் நீர்ப்பரப்பு சாக்கடல் என அழைக்கப்படுகிறது. உலகிலேயே பள்ளமான பகுதி இதுவாகும்,

சாதாரண கடல் நீரைவிட ஏழு அல்லது எட்டு மடங்கு அதிகமான உப்பும் மற்ற உப்புப் பொருள்களும் சாக்கடல் நீரில் கலந்திருப்பதால் அந்த நீர் எந்தவொரு பாரமான பொருளையும் மிதக்க வைக்கிறது. இதனால் அந்த ஏரியில் இறங்கி இயற்கையாகவே மிதப்பதில் பலர் ஆர்வம்காட்டிவருகின்றனர்., நீச்சல்தெரியாதவர்கள்கூட நீரின்மீது படுத்துக் கொண்டே புத்தகங்கள் வாசிக்கலாம். ஆனால் தற்போது சாக்கடலின்பரப்பு குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

# சிறையிலிருந்து தந்தையான கியூப கைதி

வொஷிங்டன், ஜன. 10

அமெரிக்கச் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட கியூப அரசின் இரகசிய உளவாளி ஒருவர் தந்தையாகியுள்ளார்.

அவர்மருத்துவமனையில்இருந்த போது தனது மனைவிக்கு செயற்கை கருவூட்டல் மூலம் கர்ப்பம் தரிக்க ஏற்பாடு செய்து தருமாறு அமெரிக்க அரசிடம் வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அமெரிக்க அரசு, நீதித்துறையின் மூலம் அவரது கோரிக்கையை நிறைவேற்றி வைத்திருந்தன.



ஜெரார்டோ ஹெர்ணாடஸ் என்ற அந்த உளவாளியின் விந்தணுக்கள், உறைநிலையில் வைக்கப்பட்டு பனாமா வழியாக கியூபாவுக்கு அனுப்பப்பட்டன.

கியூப அரசுக்காக உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டில் இரட்டைஆயுள்தண்டனைவிதிக்கப்பட்டிருந்த அவர், அண்மையில் அமெரிக்க–கியூப உறவுகளில் ஏற்பட்ட நெகிழ்வுத்தன்மையை அடுத்து, விடுவிக்கப்பட்டார்.

தந்தையாகும் நோக்கில் அவர் விடுத்திருந்த கோரிக்கை இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு மீண்டும் மலருவதற்கு ஒருகாரணமாக இருந்தது.

தற்போது அவருக்கு பிறந்துள்ள குழந்தையான ஜெமாவை சில பத்திரிகைகள் இராஜதந்திரக் கர்ப்பத்தில்பிறந்தகுழந்தைஎன்று வர்ணித்துள்ளன. மகிழ்ச்சிகரமான அந்தக் குடும்பத்தின்புகைப் படங்கள் தற்போது கியூபாவின் அரசநாளிதழான கிரான் மாவில் வெளியாகியுள்ளன. (ஒ–ரி)

# தாக்குதலிலிருந்து தப்பிக்க தீவிரவாதிகளுக்கு அல்குவைதா பயிற்சி

ஆளில்லா விமானத் தாக்குதலில் இருந்து தப்பிப்பது குறித்து அல்குவைதா அமைப்பு தனது உறுப்பினர்களுக்கு பயிற்சியளித்து வருகிறது.

பாகிஸ்தான்– ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் பதுங்கியுள்ள அல்குவைதா தீவிரவாதிகளை ஆளில்லா விமானங்கள் மூலம் அமெரிக்கா அழித்து வருகிறது. தீவிரவாதிகளின் மறைவிடங்களை விமானங்கள் கண்டுபிடித்த பின்பு இவற்றில் உள்ள அல்ட்ரா கமெராக்களின் மூலம் மனிதவெப்பத்தைஅறிந்துகொண்டு தாக்குதல் மேற்கொள்கின்றன.

எனவே ஆளில்லா விமானங்களின் தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்ள புதிய வழிமுறையை அல்குவைதா பின்பற்றி வருகிறது.

அதாவது, அலுமினியத்தால் ஆனதாளினால் தங்களைமூடிக் கொள்கின்றனர், அதனால்





ஆளில்லா விமானங்களால் மனித வெப்பத்தை உணர முடிவதில்லை. இந்த முறையைக் கடைப்பிடிக்க தங்கள் அமைப்பில் உள்ள தீவிரவாதிகளை பயிற்றுவித்து வருகின்றனர்.

தீவிரவாதிகளின் இந்த யுக்தி அமெரிக்காவை அதிர்ச்சியடைய வைத்துள்ளது, எனவே இதற்கான மாற்றுவழி குறித்து அமெரிக்கா, சிந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

# பல்சுவை

## நாளை 2015

**மார்கழி-27 ஞாயிற்றுக்கிழமை**

**11.01.2015**

திதி: ஷஷ்டி மு.இ.09.54 மணி வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.இ.11.54மணி வரை
சுபநேரம்: 09.33-11.03 மணி வரை
இராகுகாலம்: 05.03-06.33 மணி வரை

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 4 | 3 | 5 | 8 | 1 | 2 | 7 |
| 5 | 1 | 2 | 7 | 4 | 6 | 9 | 8 | 3 |
| 7 | 3 | 8 | 1 | 9 | 2 | 5 | 6 | 4 |
| 4 | 8 | 7 | 2 | 3 | 1 | 6 | 5 | 9 |
| 6 | 2 | 9 | 5 | 7 | 4 | 8 | 3 | 1 |
| 1 | 5 | 3 | 6 | 8 | 9 | 4 | 7 | 2 |
| 3 | 7 | 1 | 4 | 6 | 5 | 2 | 9 | 8 |
| 2 | 9 | 6 | 8 | 1 | 7 | 3 | 4 | 5 |
| 8 | 4 | 5 | 9 | 2 | 3 | 7 | 1 | 6 |

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | 2 | | 4 | 5 | | 9 |
| 1 | 9 | | | | 7 | 8 | 4 | |
| | 5 | 2 | | 8 | | | | 7 |
| 9 | | | | | | 1 | | |
| | 7 | 3 | | | | 4 | 9 | |
| | | 1 | | | | | | 3 |
| 3 | | | | 7 | | 2 | 5 | |
| | 1 | 5 | 6 | | | | 3 | 4 |
| 7 | | 4 | 5 | | 2 | | 8 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதி யான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரை களையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட்டங்கள், பகுதி கள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவை கள் (மீண்டும் மீண் டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகை யில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங் கள் ஏற்கனவே நிரப் பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என் பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகர மாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அள வில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### அறியாமையே துன்பங்களுக்குக் காரணம்

அறியாமையிலிருந்தே சகல துன்பங்களும் பிறக்கின்றன. எல்லையற்ற ஆன்மா அழுகிறது; கதறுகிறது. அது எல்லைக்குட்பட்டது என்றெல்லாம் நினைப்பது தான் அறியாமையின் மூல அடிப்படை. அழிவற்ற எப்போதும் தூய்மையான முழுமையான ஆன்மாவாகிய எம்மை, சிறிய மனம், சிறிய உடல் என்று நாமே நினைக்கச் செய்வதுதான் அறியாமையின் மூலகாரணம். இதிலிருந்தே சகல சுயநலங்களும் பிறக்கின்றன. நான் இந்தச் சிறிய உடம்பு என்று நினைத்த உடனேயே, மற்ற உடல்களுக்குக் கேடு செய்தாவது இந்த உடம்பைப் பாதுகாக்கவும், காப்பாற்றவும், அழகாக வைத்துக் கொள்ளவும் விரும்புகிறேன். அவ்வாறு நினைக்கும் போதே நீங்கள் வேறு, நான் வேறு என்றாகி விடுகிறது. இந்தப் பிரிவுணர்ச்சியே சகல தீமைகளுக்கும், துன்பங்களுக்கும் காரணமாகிறது.

## நெருக்கமான நட்பை பிரிய முடியுமா?



எந்தப் பெற்றோராலும் தமது பிள்ளைகளின் உணர்ச்சித் தேவைகளை முழு மையாக நிறைவேற்ற முடியாது. ஒரு குழந்தை தனது உள்ளத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தனது தாயைத்தான் எதிர்பார்க்கிறது. வளர்ச் சிப் பருவத்தில் சில தெளிவான கட்டங்கள் உள் ளன. அது பற்றிய தெளிவில்லாத சில தாய்மார்கள் மிகவும் சீக்கிர மாகவே தமது குழந்தைகளைச்சமூகச் சட்டத்துக்கு உட்படுத்தும் வேலையைத் தொடங்கிவிடுவதுண்டு. சில தாய்மார்கள் அளவுக்கதிகமான கண்டிப்புடன் நடந்து கொள்வதும் உண்டு. தனது தாயுடன் கொள்ளும் உறவின் வழியாகத்தான் குழந்தை தான் இருப் பதையே தெரிந்து கொள்கிறது. தனது இருப்பின் பிரதிபலிப்பாகத் தான் தாயையே பார்க்கிறது குழந்தை. வளர்ச்சிப் பருவங்களின் அடுத்தடுத்த கட்டங்களில் குழந்தைக்குத் தாய் மட்டும் போதாது. அதனது தேவைகள் பல பரிமாணங்கள் கொண்டவை. இது போன்ற சந்தர்ப்பங்களில் தனது அகத் தேவைகள் முழுமையாகப் பூர்த்தி யாகாத குழந்தையின் மனம் வெளி யுலகத்தில் யாரையோ தேடத் தொடங்கிவிடு கிறது. யாருடன் இருக்கும்போது அவர்கள் எம்முடன் நெருக்கமாக இருப்பதாக உணர்கிறோமோ, அவர்களை மனம் சட்டென்று பிடித்துக்கொண்டுவிடுகிறது. அல்லபாயும் எமது நெஞ்சில் அவர்கள் ஒரு நங்கூரம் போல் ஆகிவிடுகிறார்கள். எமக்கு அமைதியை அளிக்கிறார்கள். உள்ளத்தில் அன்பைப் பெருகச் செய்கிறார்கள். சந்தோஷத்தைத் தருகிறார்கள். அதாவது நாம் அவ்வாறு நம்பத் தொடங்கிவிடுகிறோம். அதன் பின்னர் அவர்கள் இல்லாத வாழ்க்கையை எம்மால் நினைத்துக் கூடப் பார்க்க முடிவதில்லை.

அதற்குப் பின்னர் தான் பிரச்சினை தொடங் குகிறது. குறிப்பிட்ட அந்த நபர் எமது மனத்தின் சமநிலைக்கு அவசிய மாகப் போய்விடுவதால், அவர் எமக்கு மட்டுமே சொந்தமாக இருக்க வேண்டும் என்ற மனோபாவம் ஏற்பட்டுவிடுகிறது. அந்த நபரை நாம் கட்டுப்படுத்தத் தொடங்கிவிடுகிறோம். மற்றை யாரிடமாவது அவர் சிரித்துப் பேசினாலோ, நேரம் செல வழித்தாலோ எம்மால் அதைப் பொறுத்துக் கொள்ள முடிவ தில்லை. உள்ளே பயம் வருகிறது. வெளியே அது கோபமாய் வெளிப்படுகிறது. மனத்தில் முரண் ஏற்படுகிறது. உறவு சிக் கலாகிறது. நீண்ட காலமாக இருந்துவரும் உறவே முறிந்து போய்விடும் சாத்தியமும் இருக்கிறது. வாழ்க்கை ஓட்டத்தில் நாமும் கூடவே அக வளர்ச்சி அடைய வேண்டும். அப்போதுதான் இப்படி எந்த ஒரு கட்டத் திலும் சிக்கிக் கொண்டு விடாமல் தப்பிக்க முடியும். உறவின் ஓட்டமும் வாழ்க்கையின் ஓட்டமும் ஒன்றுதான். வாழ்க்கையை வாழவேண்டும். உறவை அனுபவிக்க வேண் டும். கூடவே அக வளர்ச்சி அடைய வேண்டும். இல்லாவிட் டால் பயமும் தவிப்பும்தான் மனத்தில் நிறையும். உங்கள் பயத் தின் காரணமாக வாழ்க்கையின் சகல அம்சங்களையும் கட் டுப்படுத்த நினைக் கிறீர்கள். அது உங்கள் மனத்தில் சிக்கலையும் குழப்பத்தையும் மன அழுத்தத்தையும்தான் விளைவிக் கும். மாறாக, வாழ்க்கை ஓட்டத்தை ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்றுக் கொண்டு நீங்களும் கூடவே பயணித் தால், உறவும் வாழ்க்கையும் ஒவ்வொரு கட்டத் திலும் புதிய பரிமாணங்களைக் காட்டிக் கொண்டே செல்லும். எந்தவிதக் கட்டுப்பாடும் அவ சியமில்லை. அன்பும் சந்தோஷமும் இயல்பாக நிறைந்திருக்கும்.

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 600 | 400 |
| நண்டு | 200 | 550 | 300 | 250 |
| கணவாய் | 400 | 400 | 400 | – |
| பாரை | 450 | 500 | 400 | 330 |
| சுறா | 450 | 600 | 500 | – |
| சீலா | 250 | 400 | 350 | – |
| விளை | 450 | 400 | 320 | 300 |
| முரல் | 220 | 350 | 300 | – |
| கும்பிளா | 300 | 250 | 300 | 250 |
| கிழாக்கன் | 190 | 500 | 250 | – |
| ஒரா | 350 | 300 | 300 | – |
| திரளி | 150 | 250 | 150 | – |
| நகரை | 150 | 250 | 200 | – |
| சூடை | 100 | 100 | 100 | 50 |
| திருக்கை | 100 | 350 | 180 | 110 |
| மதனம் | – | 250 | 250 | 120 |
| கொய் | 90 | 150 | 80 | – |
| பாலை | 350 | 250 | 300 | – |
| வாழை | – | 150 | 250 | 150 |

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 140 | 80 | 120 | 100 | 120 | 60 |
| கத்தரி | 180 | 240 | 160 | 200 | 200 | 140 | 260 |
| கரட் | 160 | 200 | 240 | 200 | 220 | 280 | 260 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 60 | 50 | 50 | 60 |
| பயிற்றை | 250 | 250 | 240 | 240 | 280 | 180 | 360 |
| பாகல் | 300 | 300 | 120 | 300 | 340 | 240 | 260 |
| கருணைக்கிழங்கு | 50 | 70 | 50 | 80 | 60 | 80 | 120 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 90 | 100 | 120 | 120 | 120 |
| சி.வெங்காயம் | 50 | 120 | 90 | 100 | 80 | 140 | 160 |
| பூசணி | 40 | 50 | 50 | 50 | 30 | 50 | 80 |
| தக்காளி | 180 | 140 | 160 | 160 | 100 | 200 | 160 |
| வாழைக்காய் | 70 | 80 | 60 | 100 | 80 | 120 | 120 |
| கீரை | 20 | 50 | 40 | 20 | 60 | 40 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 60 | 70 | 30 | 20 | 20 |
| மிளகாய் | 500 | 450 | 450 | 450 | 500 | 600 | 650 |
| புடோல் | 140 | 120 | 140 | 120 | 160 | 120 | 160 |
| கோவா | 140 | 120 | 120 | 120 | 120 | 160 | 160 |
| வெண்டி | 180 | 140 | 200 | 160 | 200 | 160 | 160 |
| போஞ்சி | 300 | 300 | 320 | 240 | 340 | 140 | 350 |
| லீக்ஸ் | 300 | 240 | 250 | 280 | 320 | 400 | 320 |
| தேங்காய் | 50 | 40 | 60 | 50 | 30 | 40 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 80 | 80 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 | 80 | 60 | 60 | 120 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 30 | 10 | 20 |
| கறிமிளகாய் | 350 | 300 | 300 | 280 | 400 | 320 | 400 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 140 | 160 | 150 | 180 |



## விருச்சிகம்

இந்த ஆண்டில் சுறுசுறுப்புடன் பணியாற்றுவீர்கள். உடல் சோர்வு முற்றிலும் மறையும். வருமானம் சீராகவே இருக்குமானலும் பேராசைக்கு இடம் கொடுக்காமல் பணியாற்றவும். நண்பர்கள் போல் பழகும் விரோதிகளிடம் கவனமாக இருக்கவும். அவர்கள் உங்களுக்கு எதிராகச் சில சமயம் சதி வேலைகளில் ஈடுபடலாம். ஆனாலும் கலங்க வேண்டாம். எதிரிகள் உதிரிகளாகித் தொலைந்து போவார்கள். யாராக இருப்பினும் நன்கு யோசித்த பிறகே வாக்குக் கொடுக்கவும். மற்றப்படி கடன் தொல்லைகள் ஏற்படாது. தர்ம காரியங்களைச் செய்வீர்கள். தடங்கல்களைத் தாண்டி வெற்றியடைவதில் ஐயமேயில்லை. அனுகூலமில்லாத விடயங்களையும் உங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ளும் புத்தி சாதுரியம் ஏற்படும்.

இந்த ஆண்டு கடினமான சூழ்நிலைகளிலும் உங்களின் தனித் தன்மையை இழக்க மாட்டீர்கள். அடுத்தவர்கள் உங்களுக்கு அறிவுரை கூறும்படி நடந்து கொள்ளமாட்டீர்கள். அரசுத் தொடர்புகள் உங்களுக்குச் சாதகமாகவே அமையும். நீண்ட தூரப் பயணங்களால் நன்மை உண்டாகும். கடுமையாக உழைத்துச் செய்யும் காரியங்களில் வெற்றி வாகை நிச்சயம். தார்மீகச் சிந்தனைகளை மேலோங்கச் செய்யும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். உங்கள் உழைப்பு வீண் போகாது. இது நாள்வரை உடலில் இருந்த சோர்வும் அயர்ச்சியும் மறையும். தேக ஆரோக்கியம் சீராக மாறும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் குறையும். தாயார் வழியில் இருந்துவந்த மனஸ்தாபங்கள் மறைந்து சுமுகமான உறவு உண்டாகும். குடும்பத்திலும், உற்றார், உறவினர்களிடமும் உங்கள் செல்வாக்கு உயரும்.

உங்கள் செயல்களைப் புதிய உத்வேகத்துடன் செய்து முடிக்க வழி பிறக்கும். திட்டங்களைச் சரியாகத் தீட்டி அவைகளைப் படிப்படியாக, வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள். புதிய தொழில்களைத் தொடங்குவீர்கள். உங்கள் நண்பர்கள் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார்கள். பெரியோர்களின் ஆதரவு எப்போதுமிருக்கும். ஓய்வு நேரத்தில் கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழவும் சந்தர்ப்பங்கள் அமையும். எனினும் சனி பகவான், சமூகத்தில் நலிவடைந்தவர்களுக்கு சேவை, செய்து புண் ணியம் ஈட்டும் வாய்ப்பையே வழங்குவார்.

இதனால் தன்னலம் பார்க்காமல் உழைத்துப் புகழடைவீர்கள். உங்கள் உடலுழைப்புக்கு மேல் பன்மடங்கு லாபம் கிடைக்கும். கல்வி, கேள்விகளிலும் சிறந்து விளங்குவீர்கள்.

**உத்தியோகத்தர்கள்**

உத்தியோகத்தர்கள் பயணங்களால் அனுகூலமான திருப்பங்களைக் காண்பீர்கள். சிலர், விரும்பிய வெளியூருக்கு மாற்றலாகிச் செல்வார்கள். மேலதிகாரிகள் சற்று பாராமுகமாகவே நடந்து கொண்டாலும், தொல்லைகள் கொடுக்க மாட்டார்கள். ஆனால், சக ஊழியர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். உரிய நேரத்தில் பதவி உயர்வு கிடைக்கும். சோம்பலுக்கு இடம் கொடுக்காமல் உங்கள் வேலைகளைத் திட்டமிட்டுச் சரியாகச் செய்வது அவசியம்.

**வியாபாரிகள்**

வியாபாரிகளுக்கு தொழிலில் இருந்த போட்டிகள் குறையும். இலாபம் அதிகரிக்கும். நண்பர்களையும், வாடிக்கையாளர்களையும் அரவணைத்துச் சென்று வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். கொடுக்கல், வாங்கலில் இருந்த தொய்வுகள் நீங்கி, மனதில் உற்சாகம் தோன்றும். அதேநேரம் வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் உங்கள் கைக்கு வந்து சேருவதில் தாமதம் ஏற்படும் என்பதால் புதிதாக யாருக்கும் கடன் கொடுக்க வேண்டாம்.

**கலைஞர்கள்**

கலைத்துறையினர் எதிர்பார்த்த வாய்ப்புக்களைப் பெறுவீர்கள். உங்கள் பெயரும்; புகழும் உயரும். ரசிகர்களோடு கருத்து வேறுபாடுகள் ஏற்பட அதிக வாய்ப்புண்டு. ஆனால் அவற்றை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ரசிகர் மன்றங்களுக்குப் பணம் செலவு செய்வீர்கள். சக கலைஞர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள்.

**பெண்கள்**

பெண்மணிகள் கணவரின் பாராட்டுக்களை எளிதில் அடைவீர்கள். புதிதாக ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். இல்லத்தில் நிம்மதியைக் காண்பீர்கள். சுப காரியங்களில் கலந்து கொள்வீர்கள். உடல் நலத்தில் மட்டும் சற்று கவனமாகவே இருக்கவும்.




## கூட்டெண் பலன்கள் 4-8

ராகுவுடன் சனி சேர்ந்த ஆதிக்கப்பலன்இவர்களுக்குஇருக்கும். இவர்கள் உயரம் குறைந்தவர்களாக இருப்பர். அபூர்வமாக சிலர் உயரமாக இருப்பார்கள். இவர்களது கண்கள் மிகச்சிறியதாக இருக்கும்.

இவர்கள் சிறு வயதிலிருந்தே பலகஷ்டங்களை அனுபவித்த பின்பு தமது கடும் முயற்சியால் வாழ்க்கையில் முன்னுக்கு வருவர்.இவர்களுக்குஅமையும் தொழில் நிரந்தரமானதாக இருக்கும். படிப்பு என்பது இவர்களுக்குஅனுபவக்கல்வியாகவே அமையும். மனிதர்களைப் புரிந்து கொண்டு பேசிப் பழகும் குணம் கொண்டவர்கள்.

சிறு வயதிலேயே பெரிய மனிதரைப்போல மனத் தெளிவுடன் நடந்து கொள்வார்கள். ஏழைகள் மேல் அளவிலாப் பிரியம் வைத்திருப்பார்கள். எல்லோரிடமும் சமமாகப் பழகும் தன்மை கொண்டவர்கள்.

இவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொழில் என்று எதுவும் சரிவர அமையாது. சுயமுயற்சியில் ஏதேனும் ஒன்றைச் பிடித்துக் கொள்வார்கள்.பெற்றோர்களைப் பிரிந்து வாழும் நிலை ஏற்படும். வாழ்க்கைத் துணை நன்றாக அமையும்.

குடும்பத்தில் போராட்டம், குழப்பம் நீடிக்கும். நெருப்பு, நீர் தொடர்புள்ள தொழிலில் ஈடுபடுவர். கார், உற்பத்தி செய்யும் தொழில் புரிவர். விடுதி, அச்சகம், பத்திரிகைகளில் பணிவாய்ப்பு அமையும். கை, கால், மூட்டுவலி, காய்ச்சல், உயர் இரத்த அழுத்தம், முதுகு கழுத்து வலி, நீரிழிவு போன்ற நோய்கள் தாக்கக்கூடும்.

## கூட்டெண் பலன்கள் 4-9

இவர்கள் ராகுவுடன் செவ்வாய் சேர்ந்த ஆதிக்கப் பலனைக் கொண்டவர்கள். உடல் சற்று பூசினாற்போல் சராசரி உயரத்துடன் இருப்பார்கள். மா நிறமாக இருப்பர். நீண்ட முகம் கொண்டவர்கள். கைகால் நீண்டிருக்கும். முரடராக இருப்பர். எவரிடமும் ஏமாறமாட்டார்கள். படிப்பை விட விளையாட்டு, வீர கலையில் நாட்டம் அதிகமாகக் கொண்டவர்கள்.

சில நேரங்களில் இவர்களுடைய பேச்சு பிறருக்கு அச்சம் தரும். ஒரு விடயத்தை நினைத்து விட்டால் அதைச் செய்து முடிக்காமல் விடமாட்டார்கள். பிறந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் சென்று வாழ்வர்.

முன்னேறும் ஆர்வம் இருக்கும். உலக சுக வாழ்க்கையில் எதையும் விடாமல் அனுபவிக்க நினைப்பர். காதல் வாழ்க்கையில் ஈடுபடுவர். மனைவியானாலும் கூட இவர்களிடம் துன்பமே அடைவார்கள். குடும்ப வாழ்க்கையில் மிகவும் தொல்லை அனுபவிப்பர்.

சர்க்கஸ், கட்டட வேலைகள், பொலிஸ், இராணுவம், மோட்டார் தொழிற்சாலைத் தொடர்பானவற்றில் பணிபுரிவர். அரசியலிலும், அரச உயர்பதவிகளிலும், ஆன்மிகத் துறையிலும், பத்திரிகையிலும் பணியாற்றுவர்.

வயிற்றுக் கோளாறுகள் உண்டு. சிறு வயதிலேயே விபத்துக்கள் நடக்கும் வாய்ப்புகள் உள்ளன.

## நாங்கள் உறங்கினோம் ஆயினும் என் இதயம் விழித்திருக்கிறது

26 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மனிதனாக 13.07.1920

தெய்வமாக 06.06.1989

அமரர் வஸ்தியாம்பிள்ளை அல்வின்

(இ.போ.ச.சாரதி)

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மனிதனாக 16.09.1920

தெய்வமாக 10.01.2010

அமரர் வஸ்தியாம்பிள்ளை ஞானம்மா

வேலணை கிழக்கு, வேலணை,
4 ஆம் வட்டாரம், சாட்டி.

(55677)(4.3.7)

மகள் செ.மரியலுசியா



## நினைவஞ்சலி

5 ஆம் ஆண்டு



அமரர் கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

மண்ணில் 03.05.1922
விண்ணில் 05.01.2010
திதி: அபரபட்ச பஞ்சமி
(10.01.2015)

எப்போதும்
எங்களோடிருக்கும்
அன்பு தெய்வங்களே!
வாழ்க்கைப் பயணத்தின்
இன்பமான தருணங்களில்
உங்கள் நினைவுகள்
எங்களுக்கு
வாழ்த்துரைக்கும்!
துன்பமான வேளைகளில்
உங்கள் அனுபவங்கள்
எங்களுக்குப்
பலம் அளிக்கும்!!
அம்மா! பப்பா!
தொடரும் எங்கள்
வழிப்பயணம்
உங்கள் வாழ்க்கை
முறையின்
வழிகாட்டலில்!!!

40 ஆம் ஆண்டு



திருமதி கனகாம்பிகை சபாரத்தினம்

மண்ணில் 16.03.1927
விண்ணில் 22.12.1974
திதி: பூர்வபட்ச நவமி
(30.12.2014)

"திலகவாசம்,"
தபாலக வீதி, சாவகச்சேரி.

(55430)(4.3.7)

குடும்பத்தினர்.
இல.05, கல்லடி வீதி,
சாவகச்சேரி.



## பிறந்த நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10.01.1966



மறைவு 01.01.2008

## அமரர் தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் யாழ்.,கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)

எங்கள் குலத்தின் குல விளக்கு
அன்பான அப்பாவே
ஆலமரம் சாய்ந்ததென விழுது களாம்
எம்மை விட்டு
ஆண்டவனின் திருவடி சென்று விட்ட
உங்களுக்கு இன்று பிறந்தநாள்

எம்மோடு கொண்டாடிய பிறந்தநாள்
எம்முன் நிலைத்து நிற்கும்
அந் நினைவுகளை சுமந்து இன்றைய
பிறந்த தினத்தை நினைவு கூருகின்றோம்

பவதாரணி,
பிரணவன்,
பவித்திரா.
276, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2221877

தகவல்: திருமதி விஜயகலா மகேஸ்வரன்.
இல.32, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு-06.
தொலைபேசி: 2360679


# செய்திகள்

## தேர்தல் திணைக்களத்தின் கணினிகளுக்கு பாதிப்பில்லை

கொழும்பு, ஜன.10

தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் தருணத்தில், தேர்தல் திணைக் களத்தின் கணினி கள் எவ்விதப் பாதிப் பை யும் எதிர்கொள்ளவில்லை என்று தேர் தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. தேர்தல்கள் திணைக் களத்தின் கணினி கள் பழுதடைந் தன என்று வெளியான செய்திகளில் எவ் வித உண்மையும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. தேர்தல்முடிவுகளை வெளியிடும் பணி கள் எவ்விதத் தடை களும் இன்றி நடை பெற்றன என்றும் தேர்தல்கள் திணைக்களம் மேலும் தெரிவித் துள்ளது.

(ற)


5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08.03.1976



மறைவு 10.01.2010

அமரர் இராஜேந்திரம் விஜயகுமார்

திதி: அபரபக்க நவமி

நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.525/1,
காங்கேசன்துறை வீதி,
ஆரடிப்பிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
TP:0212226604


## சமாதானத்தை வேண்டி மகா கணபதி ஹோமம்

தென்மராட்சி,ஜன.10

மிருசுவில் உசன் கஜகேணி பிள்ளை யார் ஆலயத்தில் உலக சமாதா னத்தை வேண்டி மகா கணபதி ஹோமம் இன்று காலை 8 மணி தொடக்கம் பிற் பகல் ஒரு மணி வரை இடம்பெறும். அருள்வாக்குச் சித்தரும் ஆலய பிரதம குருவுமா கியசிவஸ்ரீஇகேதீஸ் வரக் குருக்கள் தலைமையில் முன்னணி சிவா சாரியார்கள்கலந்து கொண்டுஹோமத்தை நடத்தவுள்ளதாக ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி. தேவகுமார் அறி வித்துள்ளார்.

(வ–9)


## உங்கள் நினைவுகளில் 7 ஆண்டுகள்...

அமரர் மரியாம்பிள்ளை யேசுதாசன்



"இதோ உன்னை பெயரிட்டு நாமே அழைத்தோம் ஆகவே நீ எனக்கே சொந்தம்"
(ஏசாயா 43:1)

மண்மகிழ
22.07.1945

விண்மகிழ
10.01.2008

நீங்காத நினைவுகளில் எமை நிலை நிறுத்தி
மீளாத் துயில் கொண்ட எம் அன்பு அப்பாவே!
ஆண்டுகள் அகன்றாலும் நீங்காத உங்கள் அன்பின்
நினைவுகள் நிழலாய்த் தொடர்கின்றன
ஆண்டவரின் அன்பை அவர் அருகிருந்து சுவைக்க
உங்களுக்காய் தினமும் வேண்டுகிறோம்.

29/3, நக்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(55700)(4.3.7)

குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
30.03.1939

மறைவு
11.12.2014


அமரர் Dr.கந்தையா தங்கராசா (Dr.பரம்)

கடந்த 11.12.2014 இறைபதம் எய்திய எமது அன்புத் தெய்வம் அமரர் கந்தையா தங்கராசா (Dr.பரம்) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.01.2015) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அமரரின் இழப்புச் செய்தியை அறிந்து அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், உறவினர்கள் யாவரும் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"சக்தி இல்லம்,"
வதிரி, அல்வாய். 077 482 0506

குடும்பத்தினர்.

# சிறுவர்



## சிங்கக்குட்டியின் புதுத் தீபாவளி!

ஒரு நாள் சிங்க ராஜா குடும்பத்துடன் காட்டைச் சுற்றி வலம் வந்தது. அப்போது இளவரசர் சிங்கக்குட்டி வழிதவறி நாட்டுக்குள் நுழைந்தது. அன்றைக்குத் தீபாவளி. எங்கு பார்த்தாலும் மனிதர்கள் பட்டாசுகளைக் கொழுத்தி மகிழ்ச்சியாக இருந்தார்கள்.இளவரசர் சிங்கக் குட்டிக்கோ பட்டாசு சத்தம் பயத்தை உண்டாக்கியது. இதற்கு முன்பு இதுபோன்ற சத்தத்தை அது கேட்டதே இல்லை. அதனால், ஒருவித பயத்துடன் எங்குச் செல்வது எனத் தெரியாமல் சுற்றிச் சுற்றி வந்தது. அஞ்சி நடுங்கிக்கொண்டு ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்றது. அப்போது அந்த வழியாக வந்த தெரு நாய் ஒன்று, சிங்கத்தை அடையாளம் கண்டுவிட்டது. 'என்ன சிங்கக்குட்டி! நாட்டில் தீபாவளியை வேடிக்கை பார்க்கக் காட்டில் இருந்து வந்துவிட்டீரோ' என்று கேட்டபடி சிரித்தது. 'இல்லை... இல்லை... நான் வேடிக்கை பார்க்க வரல நண்பா. வழி தவறி நாட்டுக்குள்ள வந்துட்டேன். இங்கே எங்கு திரும்பினாலும் சத்தம் காதைப் பிளக்குதே... இதுதான் தீபாவளியா?' எனக் கேட்டது. 'என்ன.. சிங்கக்குட்டியாரே! இந்தச் சத்தத்துக்கா பயந்துவிட்டீர். இது பட்டாசு சத்தம். சில சமயம் சிறுவர்கள் எங்களைப் போன்ற அப்பாவிப் பிராணிகளின் வாலில் பட்டாசுகளைக் கட்டி, அதை வெடிக்கச் செய்தும் மகிழ்வார்கள்' என்றது தெருநாய். 'நண்பா! நான் காட்டுக்குச் செல்ல வழி சொல்ல முடியுமா?' என்று கேட்டது சிங்கக்குட்டி. 'சரி! வாருங்கள் வழி காட்டுகிறேன்' என்று கூறி, காட்டின் வாசல் வரை கொண்டுவந்து விட்டது நாய். இளவரசரைக் காணாமற் பதறிப் போயிருந்த விலங்குகள், காட்டின் வாசலில் இளவரசரைக் கண்டவுடன் ஓடிவந்து அணைத்துக் கொண்டன. 'அப்பா! இந்த ஆண்டு நாமும் தீபாவளி பண்டிகையைக் காட்டில் கொண்டாடலாமா?' என்று கேட்டது இளவரசர் சிங்கக்குட்டி. 'அப்பா! பலருக்குத் தொந்தரவு தரும் பட்டாசை வெடிக்காமல், 'ஓசையில்லா தீபாவளி'யைக் கொண்டாடலாமே' என்றது இளவரசர் சிங்கக் குட்டி. 'அப்படியே ஆகட்டும்' என்றது சிங்கராஜா.






### மனக் கணக்கு

தீபாவளிச் செலவுக்காக அழகேசன் அவரது ஒரு மாதச் சம்பளத்தைப் போல் இருமடங்குதொகையை போனஸாக முதலாளியிடம் கேட்டார். அவரது முதலாளியோ அவரது சம்பளத்தை அரையால் வகுத்து வரும்தொகையை போனஸாகத் தரச் சம்மதித்தார். அதற்கு அழகேசன் ஒத்துக்கொண்டார். அழகேசனின் சம்பளம் மாதத்துக்குரூ.2,000என்றால் அவருக்குக் கிடைத்தபோனஸ் தொகை எவ்வளவு என்று சொல்லுங்கள் பார்ப்போம்? விடை: 4000.(2000 / ட = 4000)

**பணியாளர்கள் தேவை**

எமது வைத்தியசாலைக்கு பின்வரும் பணியாளர்கள்தேவை
01. பார்மசி அனுபவமுள்ளவர்கள்
02. வரவேற்பாளர் - பெண் - இரவு பகல்
03. காசாளர் - பெண் - இரவு பகல்
இடம் : யாழ்வைத்தியசாலை,
315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.
021 222 3533
காலம் : 11.01. 2015 (ஞாயிறு)
நேரம் : முற்பகல் 10 மணி (சி.19019) (45.7.3)
சுயவிவரக் கோவையுடன் சமுகமளிக்கவும்.

## திருவாசக முற்றோதல்

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் முன்னாள் தமிழ் துறைப் பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் திருவாசக முற்றோதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ஓ)

**தேவை**

பல்பொருள் வியாபார நிலையம் ஒன்றுக்கு கணக்கு தெரிந்த காசாளர் உடன் தேவை.
T.P.077 230 6390, 077 116 6090
(55620)(45.3.7)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, கொல்லங்கலட்டியில் 11 பரப்பு மற்றும் 2 பரப்புக் காணிகள் விற்பனைக்குள்ளன.
(F18585) (12.3.7) தொடர்பு: 077 100 1390/076 539 4380

**தனி/குழு வகுப்புக்கள்**

Home Visited Classes
CHEMISTRY/BIOLOGY
(இரு மொழிகளிலும்)
நரேந்திரசிங்கம் 077 773 0840 (55598) (4.3.7)

**T.V கள் மலிவு விற்பனைக்கு**

*LED Same Sung (LED 4C) 32 " TV Rs. 35000
*LED Same Sung (LED 4C) 24" TV Rs. 28000
No. 59, Old Park Road, Jaffna.
(Nalliah Store)
(55668) (4.3) 077 7467 538

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்



தைப்பொங்கல் வெளியீடு AC / DTS
40அடி அகலம் LED திரையில்
14 முதல்
முற்றிலும் குளிரூட்டப்பட்டது
டைரக்டர் சங்கரின் பிரமாண்டமான தயாரிப்பில்
சியான் விக்ரம், எமிஜாக்சன் நடிப்பில்
ஐ
காட்சி:
10.30, 2.30, 6.30, 9.30

**2015 Chemistry Personal Classes**

Basic, Inorganic, Organic, Physical, கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.Sc (cey) M.Sc (cey) Chemistry கற்பிக்கப்படும்.
(55604)(3.7) தொடர்பு: 077 6038913

**அறைகள் வாடகைக்கு**

கொக்குவில், ஆடியபாதம் வீதிக்கண்மையில் பல்கலை மாணவிகளுக்கு அல்லது சிறிய குடும்பத்துக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.
(55611) (12.3.7) தொடர்பு: 077 403 0493

**மணமக்கள் தேவை**

* 81இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல், 2 பாவமுடைய, ஆஸ்திரேலியாவில் பிரஜா உரிமை பெற்ற, சொவ்வெயார் இஞ்சினியராகக் கடமை புரியும் மணமகளுக்கு உள்நாட்டில் B.Com. BBA முடித்த மணமகன் தேவை.
* 85இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல், 11 இல் சூரியனும், செவ்வாயும், 45½ பாவமுடைய சிவில் இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 83இல் பிறந்த, 4இல் சூரியனும், செவ்வாயும், 34 பாவமுடைய BSc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை,
(55610) (12.3.7) TP:077 607 0862

**நீங்களும் வெல்லலாம் தங்கப்பதக்கம்!**

நீங்கள் செய்யவேண்டியது என்ன? சுலபம்.....!
நியூ மைதிலி ஜூவெல்லர்ஸ்
நிறுவனத்தின் முகவரியைக் கண்டுபிடித்து தங்கள் பெயர், அடையாளஅட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் என்பவற்றை எழுதி தபால் அட்டை அல்லது கடிதத்தில் அல்லது நேரடியாகவோ, யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியிலுள்ள நியூ மைதிலி ஜூவெல்லர்ஸுக்கு அனுப்பி வையுங்கள்!15.01.2015 பொங்கல் தினத்தன்று Green Grass Hotel இல் 3.00க்கு நடைபெறவுள்ள கவிதைப் போட்டி விருதுவிழாவுக்கு வருகை தாருங்கள். குலுக்கல் முறையில் தங்கம் வெல்லுங்கள்.
மேலதிக தொடர்புகளுக்கு: 076 524 4710
(55612) (12.3.7) Facebook.com/Jaffnanews

**சாதாரண தரத்தின் பின்னர்** 4 மாதங்கள்

நாளைய உலகை வெற்றிபெற சர்வதேச அங்கீகாரம் பெற்ற டிப்ளோமாவை கற்றிடுங்கள்

சாதாரண தர மாணவர்களுக்கு மத்தியில் மிகவும் பிரபல்யமான இரட்டை டிப்ளோமா



Diploma in Information Technology
Diploma in English
தை 15ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்து
Rs.15,875 சேமிக்கவும்
இரட்டை டிப்ளோமாவிற்கான சாதாரண கட்டணம் Rs. 44,000
இரட்டை டிப்ளோமாவிற்கான கழிவுடனான கட்டணம் Rs. 28,125
அனைத்து டிப்ளோமாவிற்கும் 2 சான்றிதழ்கள்
ESOFT மற்றும் Edexcel UK
assured by PEARSON
அனைத்து டிப்ளோமா பாடநெறிகள் பிரித்தானிய PEARSON EDEXCEL நிறுவனத்தினால் தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது

கீழுள்ள டிப்ளோமா பாடநெறிகளும் சாதாரண தரத்தின் பின்னர் கற்கலாம்




டிசம்பர் 31 திகதிக்கு முன்னர் பதிவுசெய்து
முதல் டிப்ளோமாவிற்கு 25%*
இரண்டாவது டிப்ளோமாவிற்கு 50%*
கழிவினை பெற்றிடுங்கள்

ESOFT - இலங்கையின் பாரிய உயர் கல்வி வலையமைப்பு

புதிய பிரிவுகள் ▶ 12.01.2015 | 17.01.2015

பதிவுகளுக்கு உங்கள் பெயர் விபரங்களை கீழ் தரப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும் 077 309 9 308
SMS your Details ▶

ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142

இலங்கையின் மிகப்பாரிய உயர்கல்வி வலையமைப்பு

# தொடர்ச்சிகள்

## வீடு

அலரி மாளிகையிலிருந்து, ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தினரது பொருள்கள் பொதி செய்யப்பட்டு மெதனமுல்லவிற்கு வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஜனாதிபதி என்ற முறையில் கொழும்பு அலரி மாளிகை இல்லத்துக்கு அருகில் இருந்து ஹெலிக் கொப்டர் மூலமும் மெதமுலனவுக்குச் சென்று வந்த மஹிந்த ராஜபக்ஷ – குடும்பத்தினர், நேற்று தமது காரில் கொழும்பிலிருந்து ஊருக்குப் புறப்பட்டனர்.

ஜனாதிபதிக்குரிய பாதுகாப்புத் தொடரணியை அவர் இன்னும் மீளக் கையளிக்காதமையால் அந்த வாகனத் தொடரணியிலேயே தற்போது அவர் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். அவர், இனி அங்கேயே தங்கியிருப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–5)

## ஆடம்பரம்

பாதுகாப்புக் கெடுபிடிகள் இறுக்கங்கள் ஏதுமின்றி மிகச் சாதாரண நிகழ்ச்சி போன்று பதவியேற்பு இடம்பெற்று முடிந்தது. கடந்த இரண்டுதசாப்த காலப் பகுதியில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவியேற்பு நிகழ்வு ஒன்று இப்படி மிகச் சாதாரணமாக மக்கள் மத்தியில் இடம் பெற்றிருப்பது இதுவே முதல் தடவை.

ஆடம்பரமில்லை

படையினர் அணிவகுப்போ, கார்களின் அணிவகுப்போ நேற்றைய நிகழ்வில் இடம் பெறவில்லை. கடந்த காலங்களில் ஜனாதிபதியாக பதவியேற்க வருபவர்கள், பாதுகாப்பு படைகளின் வாகனத் தொடரணியுடனேயே வந்தார்கள். ஆனால் மைத்திரிபால சிறிசேன, காரில் மிக எளிமையாக சுதந்திர சதுக்கத்துக்கு வருகை தந்தார். அவரது காருக்கு முன்பாக சம்பிரதாய பூர்வமாகச் சில குதி ரைப் படையினர் கொடிகளை ஏந்தி வந் தனர்.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்தன புதிய ஜனாதிபதியை மாலையிட்டு வரவேற்றார். அவரின் பின்னே பிரதமராகப் பதவியேற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவும் வந்தார்.

ஒரு மேசை இரு கதிரைகள்

மெல்ல நடந்து சுதந்திர சதுக்க மேடையை அடைந்தனர் பிரமுகர்கள். அங்கு பதவியேற்பு நிகழ்வுக்காக ஒரு சிறு மேசையும் அதன் எதிரும் புதிருமாக இரு கதிரைகளும் போடப்பட்டிருந்தன.

நெருக்கியடித்தபடி சுற்றிவளைத்து நின்ற ஊடகவியலாளர்களுக்கு மத்தியில் உயர் நீதிமன்ற நீதியரசர் க.ஸ்ரீபவன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்த மைத்திரிபால, பின்னர் கதிரையில் அமர்ந்து பத்திரங்களில் கையெழுத்திட்டு தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். அதன் பின்னர், அதே போன்று புதிய ஜனாதிபதியின் முன்பாக ரணில் விக்கிரம சிங்க பிரதமராகப் பதவியேற்றார். (உ–5)

## நிகழ்ந்தது

சுதந்திர சதுக்கத்தில் கூடியிருந்த ஆயிரக் கணக்கான மக்கள் கரகோஷம் எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்து இலங்கையின் புதிய ஜனாதிபதியை வரவேற்றனர்.


நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார் என்பதை நண்பகல் அளவில் தேர்தல்கள் ஆணையாளர் உத்தியோக பூர்வமாக அறிவித்தார். அதனை அடுத்து மாலையே பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வது என்று அவர் தீர்மா னித்தார். சகல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரசியல் தலைவர்களையும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தொலைபேசி மூலம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை. அவரது சகோதரர்களான பஸில் ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரும் பங்கேற்கவில்லை. இருப்பினும் ஆளும் கட்சி சார்பில் சபாநாயகரும் முன்னாள் ஜனாதிபதியின் சகோதரருமான சமல் ராஜபக்ஷ, பிரதி சபாநாயகர் சந்திமால் வீரக் கொடி ஆகியோர் பங்கேற்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் பலர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்டனர். சம்பிரதாயத்துக்கு அமைவாக முப்படைத் தளபதிகளும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சதுக்கத்துக்கு இரவு 6.06 மணிக்கு புதிய ஜனாதிபதி வருகை தந்தார். அவரது மனைவி மற்றும் மகன் ஆகியோரும் கூட இருந்தனர். இராஜதந்திரிகள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோருக்கு கைலாகு கொடுத்த பின்னர் மண்டபத்தினுள் உள்நுழைந்த மைத்திரி, சமய அனுஷ்டானங்களை மேற்கொண்டார்.

தொடர்ந்து உயர் நீதிமன்ற நீதியரசர் க.ஸ்ரீபவன் முன்பாகப் பதவியேற்றுக் கொண்டார். நிகழ்வில் தேசிய கீதம் இசைக்கப்படவில்லை. சிங்கள மொழியில் பாடல் பாடப்பட்டது. நிகழ்வின் அனைத்து அறிவித்தல்களும் சிங்கள மற்றும் தமிழ் மொழியில் மேற்கொள்ளப்பட்டன. பதவியேற்பு நிகழ்வின் இறுதியில் நாட்டு மக்களுக்கு சில நிமிடங்கள் சிங்கள மொழியில் உரையாற்றினார் மைத்திரிபால. (உ–5)

## மரண அறிவித்தல்கள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| ★ | ★ |
| 28 . 05 . 1949 | 08 . 01 . 2015 |

### அப்பச்சி வேலாயுதபிள்ளை

சுழிபுரம் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், மொன்றியல், கனடாவில் வாழ்ந்தவருமான அப்பச்சி வேலாயுதபிள்ளை 08.01.2015 வியாழக்கிழமை மொன்றியல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பச்சி-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-தங்கநாச்சியார் தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ரமேஷ் மற்றும் ரஜனி, ராகினி, ரமணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிதரன், குகராசா, துஷாந்தி ஆகியோரின் அன்பு மாமனும், ஜெசுரன், அப்பியா ஆகியோரின் அன்புப் பேரனும், குணபாக்கியம், பரமசிவம், புனிதவதி, சிவபாலன், உமாதேவி, சிவநேசன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (10.01.2015) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **சசிதரன்** (மருமகன்)
**0776165300,**
**0014506827407.**

### செல்லப்பா ராதா



யாழ். தெல்லிப்பளை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா ராதா கடந்த 02.01. 2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-மாமாங்கம் தம் பதியரின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்றவர்களான நடேசன்-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், புஷ்பராணியின் அன்புக் கணவரும், ரமணன் (லண்டன்), ராகுலன் (லண்டன்), அபிராமி (லண் டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராணி இரத்தினசிங்கம் (இலங்கை), மல்லிகாதேவி மகாலிங்கம் (இலங்கை), ஜெகநாதன் (இலங்கை), பத்மநாதன் (இலங்கை) காலஞ்சென்ற காத்தவராஜன், ரவீந்திரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கஜேந்திரநாத்தின் அன்பு மாமனும், சுதாகரன் திரிலோகநாயகி ஆகியோரின் அன்புச் சம்பந்தியும், நகுலேஸ்வரி சுந்தரலிங்கம் (கனடா), பவாணீஸ்வரி செல்வராஜா (இலங்கை), ரவீந்திரன் (கனடா), புவீந்திரன் (ஜேர்மனி), ஞானேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.01.2015 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு Merton hall, 76 king ston road, Wimledon, Sw191LA,UK இல் நடைபெற்று, தகனக் கிரியைகள் பி.ப ஒரு மணிக்கு Streatham park cemetery Rowan Road, Streatham Vale, Sw165JF,UK இல் நடைபெறும்.

அன்றைய தினம் இலங்கை கொல்லங்கலட்டி தெல்லிப்பளையில் அவரது அஞ்சலி நிகழ்வு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ரமணன் (பிரித்தானியா)**
+447472227886

**ஜெகநாதன் (பாபு-சகோதரர்)**
0771234619
**மின்சார சபை ஊழியர்)**

## மரண அறிவித்தல்கள்



### சிதம்பரி சின்னப்பிள்ளை

விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் மதவடிலேன், பத்தா வத்தை இளவாலையை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரி சின்னப்பிள்ளை நேற்று (09.01.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும், சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) மற்றும் காலஞ்சென்ற கிருஸ்ணசாமி (நெல்களஞ்சிய உத்தியோகத்தர்), வேலாயுதம் (சுவிஸ்), தெய்வேந்திரம் (சுவிஸ்), இலங்கைநாயகி (கனடா), சரஸ்வதி (கனடா), தேவகி, மல்லிகா தேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நகுலேஸ்வரி, ஜெகதீஸ்வரி கோமதி (சுவிஸ்), லதாராணி (சுவிஸ்) மற்றும் காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா (ஆனந்தன்), தேவராசா (கனடா), செந்தில்நாதன் (ஜேர்மனி), திலகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2015) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.11.00 மணியளவில் முள்ளானை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மதவடி லேன்,**
**பத்தாவத்தை, இளவாலை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**021 790 4127**
(55618)(4.7.3)

### செல்வி கொஞ்சேஞ்சியம்மா நீக்கிலாப்பிள்ளை

(ஓய்வு நிலை ஆசிரியை)



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கொஞ் சேஞ்சியம்மா நீக்கிலாப்பிள்ளை (09.01.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீக்கிலாப் பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அடைக்கலமுத்து, அன்னமேரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, நீக்கிலாப்பிள்ளை (ஓய்வு நிலை அதிபர், யாழ்/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், செபமாலையம்மா, யூலியற்,றஞ்சினி (ஆசிரியை - யாழ்/ நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்), சாந்தினி ஆகியோரின் சிறிய தாயும், காலஞ்சென்ற பேனாட் லூசியன், மரியவியானி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (10.01.2015) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நல்லடக்க ஆராதனையின் பின் நாவாந்துறை சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**றஞ்சினி சூசைப்பிள்ளை,**
(ஆசிரியை - யாழ்/ நாவாந்துறை
றோ.க. வித்தியாலயம்)

(55623) (45.3)

### திருமதி குகவதனா தனபாலன்

அராலிமத்தி அராலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி குகவதனா தனபாலன் 08.01.2015 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் சங்கரத்தையைச் சேர்ந்த காலஞ்சென்ற சிற்றப்பலம் தனபாலனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஆசிரியர்) மற்றும் நல்லம்மா (ஆசிரியை) தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சிற்றப்பலம்-தெய்வானைப்பிள்ளை தம் பதியரின் மருமகளும், சுதர்சனின் (ஆசிரியர்-சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்) தாயும், குகானந்தன் (கட்டார்-கியூ கோன்), குகரதி (ஆசிரியை-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி) ஆகி யோரின் சகோதரியும், இராசரத்தினம், துரைராஜா, இரகுநாதன், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தியாகராஜா, வேலுப்பிள்ளை, நித்தியானந்தன் மற்றும் அகிலாண்டேஸ்வரி, சசிதரன் ஆகியோரின் மைத்துனியும், தனுஷாவின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.01.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அராலி பூணாவோடை மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 077 684 5727

தகவல்:
**குடும்பத்தினர்.**

# செய்திகள்

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: உத்தியோகத்தில் சாதக பாதகங்கள், அதிக குறைகள் இருக்கும். விருப்பம் இல்லாத மாற்றத்துக்கும் வாய்ப்பு உள்ளது. மன உளைச்சல், வேலைச்சுமை நீங்கி நிம்மதி அடைவீர்கள். தொட்டது துலங்கும்.

**இடபம்**: மற்றவர்களை அனுசரித்து நடப்பது நலம் தரும். இடமாற்றத்துக்கு வாய்ப்பு உள்ளது. பெரிய விசாலமான வீட்டுக்கு குடிபோவதற்கு வாய்ப்பு வந்து சேரும்.

**மிதுனம்**: நண்பர்கள் இடையே வீண் பேச்சுக்கள், அதிக நெருக்கம் தவிர்ப்பது அவசியம். மாணவ, மாணவிகளுக்கு கல்லூரியில் சேர அதிக முயற்சி தேவைப்படும்.

**கடகம்**: வியாபாரிகள் கடையை விரிவுபடுத்துவீர்கள். வசதி படைத்த உறவினர் உதவுவார். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகள் மூலமாக நன்மைகள் வந்து சேரும்.

**சிங்கம்**: நாலாபக்கம் இருந்து நல்ல செய்திகள் குவியும். பிள்ளைகளுக்கு திருமணத் தடைகள், தோஷங்கள் நீங்கும். நீங்கள் விரும்பியபடி நல்ல சம்பந்தம் கூடிவரும்.

**கன்னி**: கணவர் வழியில் உறவுகளுடன் வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நலம் தரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்திருந்த தம்பதியர் ஒன்று சேருவார்கள்.

**துலாம்**: மருத்துவ செலவுகளுக்கும் இடமுண்டு. புதிய முயற்சிகளில் நிதானம், கவனம் தேவை. அறிமுகம் இல்லாதவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம்.

**விருச்சிகம்**: உத்தியோகம் சீராக இருக்கும். நம்பிய இடமாற்றம் வரும். உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். இழந்த சலுகைகள் மீண்டும் கிடைக் கும். வியாபாரம் விருத்தியாகும்.

**தனுசு**: போட்டிகள் நீங்கும். புதிய முயற்சிகள் வெற்றியடையும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். உங்களுக்கு அம்சமான, ஆனந்தம்மிக்க, பொருள் சேர்க்கை உள்ள நாளாக அமையும்.

**மகரம்**: ஒரு சொத்தை மாற்றி வேறு சொத்து வாங்குவீர்கள். அலைச்சல், செலவுகள் உண்டாகும். பெரிய மனிதர்கள், உயர்பதவியில் இருப்பவர்களின் நட்பு, ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்**: மனைவி மூலம் மகிழ்ச்சி, திடீர் அதிர்ஷ்டம், சொத்து சேர்க்கை உண்டு. தாய் உடல்நலம் பாதிக்கப்படலாம். மருத்துவ செலவுகளும் ஏற்படும். வெளிநாட்டில் இருப்பவர்கள் திடீர் பயணமாக சொந்த ஊர் திரும்புவார்கள்.

**மீனம்**: நீங்கள் பெருமிதம் அடைகிற நிகழ்வு, குடும்பத்தில் உருவாகும். தொழில், வியாபாரம் செழித்து, சமூகத்தில் புகழ் பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு, எதிர்ப்பாளரால் இருந்த தொல்லை குறையும்.

## கால்கோள்விழா நிகழ்வுகள் 19இல்

பாடசாலைகளில் தரம் ஒன்றில் இணையும் மாணவர்களை வரவேற்கும் கால்கோள்விழா-நிகழ்வுகள் எதிர்வரும் 19 ஆம் திகதி நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

2015 இல் தரம் 2 வகுப்பில் கற்கும் மாணவர்களை தரம் ஒன்றில் இணையும் மாணவர்களுக்கு மலர்மாலை அணி வித்து மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்கவுள்ளனர்.

வலய ரீதியாக ஒரு பாட சாலையில் இந்த நிகழ்வை விழாவாக நடத்தவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் தென்மராட்சி கல்வி வலய கால்கோள்விழா கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

அதேநேரத்தில் ஏனைய பாடசாலைகளிலும் மாணவர்கள் வரவேற்கப்பட்டு இணைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை புதிதாக இணையவுள்ள மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்க பிரதேச வங்கிகள் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக அறியப்படுகிறது. (வ-9)

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி
veta Spoken English
Veta Fluency Diploma



புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
| --- | --- | --- | --- |
| Mon,Wed,Fri: 9.30 a.m. Mon,Wed,Fri: 1.30 p.m. | Tue, Thu 10.00 a.m. Sat, Sun 3.30 p.m. | Mon, Wed, Fri 10.30 a.m. | Tue, Thu 8.30 a.m. |

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள் Duration: 3 Months
பல்கலைக்கழகம் செல்லவுள்ளோருக்கான விசேட பிரிவுகள்
DMI COMPUTER EDUCATION
UK விசாவுக்கான ஆங்கிலப்பரீட்சை 2015 புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை
IELTS •Unique Test Tips •Latest course Materials
IELTS பரீட்சை பதிவுகள் இலவசமாக எந்த கிளையிலும் மேற்கொள்ள முடியும்
DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
| --- | --- | --- | --- |
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M. M. V. வீதி. Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | 130, கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970 |

இலவசம்: அழகுக்கலை பயிற்சி Nivithra
(நிபந்தனைக்குட்பட்டது)
புதுவருடத்தை முன்னிட்டு
நிவித்ரா அழகுக்கலை நிலையத்தின்
இலவச அழகுக்கலை
வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இதில் இணைந்துகொள்ள விரும்புவோர்
15.01.2015 ஆம் திகதிக்கு
முன் பதிவுகளை மேற்கொள்ளலாம்





முதல் 10 பதிவுகளிற்கு Cake Icing பயிற்சி இலவசம்
குழுவினராக பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு விசேட சலுகைகள்
பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்
இல.340, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் (ஸ்ரீலங்கா புத்தகசாலை அருகில்)
தொடர்பு : 077 771 2604, 076 691 9277

30ம் ஆண்டில் தடம் பதிக்கும் உங்கள் பயிற்சி நிலையம்
யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!
- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling
(கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)





- Nail art
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்) மெஹந்தி போடுதல்



- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B) பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)





சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 18-01-2015
ஞாயிறு காலை 9.30 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 19-01-2015
திங்கள் காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

# தொடர்ச்சிகள்

## பிரதமரானார்

சார்பில் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன புதிய ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டிருந்தார். தேர்த லுக்கு முன்னரே, பொது எதிரணி வேட்பாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனாவுடன், எதிர்கட்சித் தலைவ ராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுடன் உடன்படிக் கையை மேற்கொண்டிருந்தார். அதில்தான் ஜனாதிபதி யாகப் பதவியேற்று 24 மணி நேரத்துள், ரணில் விக்கிரம சிங்கவை பிரதமராக நியமிப்பேன் என்று தெரிவித் திருந்தார்.

அதற்கமைய, நேற்று மாலை 6.21 மணிக்கு புதிய ஜனாதி பதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றிருந்தார். இதனையடுத்து புதிய ஜனாதிபதி, நாட்டின் அடுத்த பிரத மராக ரணில் விக்கிரமசிங்கவை நியமித்தார். இதற் கேற்ப, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மைத்திரிபால முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து, நாட்டின் 15 ஆவது பிரதமராகப் பதவியேற்றார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, நாடாளுமன்றத்தில் 136 ஆசனங்களுடன் பெரும்பான்மை பலத்துடன் உள்ளது. இதன் பிரீதமராக தி.மு.ஜயரத்தன இருக்கின்றார். இந்த நிலையில் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற மைத்திரி பால, தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தார்.

இதன் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியின் அமைச்சரவையை மாற்றிய மைக்கும் நடவடிக்கையை ஜனாதிபதி ஆரம் பித்துள்ளார். (ந–5)

## உஆவது

அரசியல் கலாசாரத்தை உருவாக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதியாக நேற்று மாலை பதவியேற்றுக் கொண்ட பின்னர் அவர் நாட்டு மக்களுக்கு உரையாற் றினார்.

"புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கும் நடவடிக் கையில், ஊழல் மோசடிகளை ஒழித்து, நாட்டுக்காக பாடுபடும் அரசியல் தலைமைகளை உருவாக்கும் பணி களில் என்னை அர்ப்பணிப்பேன். எதிர்கால சந்ததியி னரை கவனத்தில் கொண்டு செயற்படுவோம்.

மீண்டு மொருமுறை – இரண்டாவது தடவையாகவும் – ஜனாதிபதியாகும் எண்ணம் எனக்கு இல்லை. அனைத்து இன மற்றும் மதங்களின் உரிமைகளும் பேணப்படும் வகையில் இலங்கை நாடு அபிவிருத்தி நோக்கிக் கொண்டு செல்லப்படும்.

என்னை வேட்பாளராகத் தெரிவு செய்த ரணில் விக்கிரம சிங்கவுக்கும், ஹெல உறுமய, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கி றேன்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கும் இந்தத் தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்" – என்றார் அவர். (உ–5)


ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136 நாடுகளில் 1040 கிளைகள். ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்), இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள். புதிய வகுப்புகள் விரைவில் ஆரம்பம்


உடன் பதிவுசெய்யுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்



முதலாவது பிறந்த நாள் வாழ்த்து


சிவஸ்ரீ யோ.சுபாஸ்கரகுருக்கள்
வைதேகி
தம்பதியரின் சீமந்த புத்திரி
செல்வி
லக்ஷ்விகா
இன்று (10.01.2015) தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் மாலை 4.30 மணியளவில் விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அத்தியடி தாத்தா, அப்பம்மா, நீர்வேலி தாத்தா அம்மம்மா, அனைவரும் அத்தியடி விநாயகர், சரவணை பள்ளப்புலம் முருகன், நீர்வேலி காளிஅம்மன், அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என ஆசீர்வதித்து வாழ்த்துகின்றோம்.
லக்ஷ்விகா பவனம்,
433, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
T.P: 0777222551
சிவஸ்ரீ
யோகீஸ்வர சுபாஸ்கரகுருக்கள்
ஸ்ரீமதி வைதேகி தம்பதியர்



USA, UK, Europe இல்
உங்கள் உயர்கல்வியைக் கற்க
விரும்புகிறீர்களா???
Don't worry....
No IELTS....
முற்பணம் எதுவும் இல்லை...
இப்போது Sport Admissions
வழங்கப்படுகிறது...

உடன் தொடர்புகளுக்கு:
Email-Sharikah.usa@hotmail.com
Ceil-001 347 837 3148 OR 001631 346 9168
(55576)(4.7.3) Business-001 631 849 1722



சானியா கேபல் கெயர்
262, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு
ஆயுள்வேத வைத்தியசாலை
★ ஒரே வாரத்தில் கருமை நிறம் நீக்கம், முகப்பருக்கள், சுருக்கங்கள், பாலுண்ணிகள், கருவளையம் உட்பட அனைத்து சருமப் பிரச்சினைகளுக்குமான நிரந்தர தீர்வு!!!
★ முடி உதிர்வு, பொடுகு, இளநரைக்கான சிகிச் சைகள்.
★ உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல்.
★ மூலிகை பேசியல்கள்
முற்பதிவு அவசியம்: 0777 351954




புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்துக்கள்
புதிதாக பதவியேற்றிருக்கும்
இலங்கையின் 7ஆவது ஜனாதிபதி ஆகிய
அதிமேதகு ஜனாதிபதி
மைத்திரிபால சிறிசேனா
அவர்களை வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
கிருபா லேணர்ஸ்
உரிமையாளரும், ஊழியர்களும்.
Kiruba Learners
Govt. Approved A Grade Driving Training School

# ஆட்சி மாற்றத்தின் தேவையை உணர்த்தியுள்ளனர் மக்கள்

## ஜே.வி.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜன.10

வாக்களிப்பு வீதம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமை நாட்டின் இன்றைய ஆட்சியை மாற்ற வேண்டும் என்ற தேவை மக்களுக்கு இருந்ததை வெளிக்காட்டியுள்ளதாக ஜே.வி.பியின் பரப்புரை செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மக்கள் வாக்களிப்பது இந்த தேர்தலில் குறிப்பிடத்தக்களவு உயர்ந்துள்ளது. மக்கள் மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிராக வாக்குகளை பயன்படுத்தியிருக்கலாம்.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற தேவை மக்களுக்கு இருந்ததை இது தெளிவுப்படுத்தியுள்ளது. வன்முறைச் சம்பவங்கள் தேர்தல் தினத்தில் மாத்திரமல்ல அதற்கு முன்னர் இருந்தே அதிகளவில் இடம்பெற்றது.

தேர்தலுக்கு முதல் நாள் சட்டவிரோதமாக சுவரொட்டி ஒட்டப்பட்டது. அண்மைய கால வரலாற்றில் அரச சொத்துக்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்ட தேர்தலாக இந்த தேர்தல் காணப்பட்டது எனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

(ற)

## தொடர்ச்சிகள்

### தேசிய

களமிறங்கிய மைத்திரிபால சிறிசேனவுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆதரவு வழங்கியது. தற்போது தேர்தல் முடிந்துள்ள நிலையில், மைத்திரிபால சிறிசேன வடக்கு – கிழக்குப் பகுதிகளில் அமோக வெற்றியைப் பெற்றதுடன், ஜனாதிபதியாகவும் தெரிவாகியுள்ளார். அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேனவின் தலைமை மீது மக்கள் அதிக எதிர்பார்ப்புகளை முன்வைத்து தமது முடிவைத் தெளிவாகவும் – வெளிப்படையாக கூறியிருக்கின்றார்கள். நாடு பழைய பாதையிலிருந்து விலகி வேறு வழியில் – நியாயமான தடத்தில் – பயணிக்கவேண்டியதன் அவசியத்தை தமது விருப்பமாக, நாட்டு மக்கள் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள்.

நாட்டு மக்கள் அனைவரும் சமாதானமாகவும், சமத்துவமாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்கு உகந்த சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற தமது எதிர்பார்ப்பை அவர்கள் அப்பட்டமாக முன்வைத்திருக்கின்றார்கள். தமிழ் மக்களும் தமிழ்ப் பேசும் மக்களும் – குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் – தங்களுக்கு நீதியும் நியாயமும் கிட்டும் என்று நம்பி இந்தத் தீர்ப்பை அளித்திருக்கின்றார்கள்.

அதனையே ஒட்டுமொத்தமாக இந்தத் தேர்தல் வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்தத் தேர்தல் ஜனநாயக மாண்புகளுக்கு, மக்களின் இறைமைக்குக் கிடைத்த மகத்தான வெற்றி. அந்த ஜனநாயக மாண்பின் வெற்றியில் தங்களுக்கு உள்ள உரிமை – அந்த இறைமையில் தமக்கு உள்ள நியாயமான உரித்து – உரிய முறையில் தங்களுக்கும் பகிரப்படும் என்று தமிழ் மக்கள் நம்புகின்றார்கள் – என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ற-5)

### தீர்வு

முடிவு தொடர்பில் நேற்று அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் இணைந்து தேர்ந்தெடுத்திருக்கும் தலைவரே மைத்திரிபால சிறிசேன. அவரின் கீழ் இந்த நாட்டில் உண்மையான ஜனநாயகம் நிலைநாட்டப்படும் என்று நான் முழுமையாக நம்புகின்றேன்.

அது மட்டுமல்ல அறுபது வருடங்களுக்கு மேலாகத் தீர்க்கப்படாதிருக்கும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வை எட்டுவதற்கான அத்திபாரம் நடப்படும் என்றும் நம்புகின்றேன். மைத்திரிபாலவுக்குச் சார்பாக எங்கள் மக்களின் சகல ஒத்துழைப்புக்களும் உதவிகளும் வழங்கப்படும்.

புதிய ஜனாதிபதி மைத்திரிபாலவை நாங்கள் என்றும் நம்பலாம். பல கடினமான கடப்பாடுகள் அவரைச் சார்ந்துள்ளன. அண்மைய காலங்களில் இயற்கை இடரினால் இடைத்தங்கல் இன்னல்கள் பலவற்றுக்கு ஆளாகியிருக்கும் வடக்கு – கிழக்கு மாகாண, மலையக மக்களின் வாழ்க்கையை சீரமைக்க வேண்டிய கடப்பாடு, பெரும்பான்மை மதவெறியின் தாக்கத்தால் மருண்டு போயிருந்த முஸ்லிம் மக்களை அணைத்தெடுத்துச் செல்ல வேண்டிய கடப்பாடு, போர் முடிந்தும் அளவுக்கதிகமான இராணுவப் பரம்பலாலும் அவர்களின் உள்ளீடல்களாலும் அல்லலுறும் எமது வடக்கு – கிழக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரங்களையும் வாழ்க்கை நிலைகளையும் சீரமைத்து மாற்றியமைக்க வேண்டிய கடப்பாடு என்று பல கடமைகள் அவரைச் சார்ந்து உள்ளன. அது தொடர்பில் புதிய ஜனாதிபதி கவனம் செலுத்துவார்.

ஜனநாயகத்தை நிலைக்கச் செய்வதானால் பொறுமை, நம்பிக்கை, காருண்ய மனோநிலை யாவும் அவசியம். அவற்றை நாம் கடைப்பிடித்தே ஒரு ஜனநாயகப் புரட்சிக்கு வித்திட்டுள்ளோம். வருங்காலம் புதியதொரு சகாப்தத்தை உண்டு பண்ணட்டும். எமது தேவைகளை அறிந்து எமது மனோநிலைகளைப் புரிந்து நாட்டை ஆள்வோர் செயற்படட்டும்.

முதலமைச்சர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

(உ-5)


## மரண அறிவித்தல்



**வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் (சின்னக்கிளி)**

(ரஜனி பீடா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் நேற்று (09.01.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-காந்திமதி தம்பதியரின் மகனும், நிர்மலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், துஷாந்தின் பாசமிகு தந்தையும், கனகம்மா, விசுவலிங்கம், காலஞ்சென்ற கனகேஸ்வரி மற்றும் கணேசலிங்கம், யோகேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரனும், கந்தசாமி, பரமேஸ்வரி, கார்த்திகேசு, கௌசலாதேவி, கெங்க நாத சிவம், தேவராசா, அமிர்தலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ரஜனி பீடா ஸ்ரோர்ஸ்,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
T.P: 077 505 1399, 077 1677286,
021 226 3612.

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**திருமதி அன்னக்கண்டு நல்லையா**

மலர்வு 12.03.1930 — உதிர்வு 12.12.2014

கடந்த 12.12.2014 இறைபதமடைந்த எமது குலவிளக்கு திருமதி அன்னக்கண்டு நல்லையா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (10.01.2015) சனிக்கிழமை நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்திகேட்டு உடன்வந்து உதவிய இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட. மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய. பத்திரிகைகள் மூலம் அஞ்சலி செலுத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனை உரை நிகழ்த்திய உற்றார். உறவினர்கள் நண்பர்கள். அயலவர்கள். கோப்பாய் பிரதேச வைத்தியசாலை சமூகத்தினர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சமூகத்தினர். யாழ். வலயக் கல்வி அலுவலக சமூகத்தினர் மற்றும் தேசிய கல்வி நிறுவக யாழ் பிராந்திய முதுகல்விமாணி கற்கை நெறிசார் சமூகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பேச்சி அம்மன் கோயில் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (55615) (45.3.7)

குடும்பத்தினர்.

# செய்திகள்

## மைத்திரிபாலவுக்கு சீனாவும் வாழ்த்து

கொழும்பு, ஜன. 10

இந்தியப் பிரதமர், புதிய ஜனாதிபதி மைத்திரிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள நிலையில், சீன அரசும், தனது நாட்டின் சார்பில் ஜனாதிபதி மைத்திரிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளது. அத்துடன் இலங்கையுடனான உறவு தொடரும் என்று தெரிவித்துள்ளது.

சீனத் தலைநகர் பீஜிங்கில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சின்பேச்சாளர் ஹொங்லீ, 'இலங்கையில் சீனா முன்னெடுத்து வரும் திட்டங்களைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதற்கு புதிய அரசு தனது ஆதரவை எங்களுக்கு வழங்கும்' என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் சீனா பல்வேறு துறைகளில் மேற்கொள்ளும் இருதரப்பு ஒத்துழைப்புடனான அபிவிருத்தி திட்டங்கள், இரு நாட்டு மக்களுக்குமே நன்மை தருவன என்றும் அவர் கூறியுள்ளார்.

புதிய அரசும் சீனாவுடன் நட்பு ரீதியான கொள்கையைக் கடைப்பிடிக்கும் என்று நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஆட்சியில் இருந்த அரசுகளுடன் சீனா கடைப்பிடித்த ஆழமான நட்புறவுக் கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்றும் அவர் மேலும் மேலும் கூறினார். (த-5)

## மதுபோதையில் தலைக்கவசம் இன்றி மோ.சைக்கிள் செலுத்திய மாணவர்கள்

தென்மராட்சி, ஜன. 10

தேர்தல் கடமைகளில் பொலிஸார் ஈடுபட்டிருந்த வேளை அளவுக்கதிகமான மதுபோதையில் தலைக்கவசம் இன்றியும், சாரதி அனுமதிப் பத்திரம் இன்றியும் மோட்டார் சைக்கிளில் பயணித்த பாடசாலை மாணவர்கள் இருவர் போக்குவரத்துப் பொலிஸாரிடம்வசமாகமாட்டிக்கொண்டனர். அவர்கள் வீதியில் மறித்த பொலிஸாருடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

பிரபல பாடசாலையில் கல்வி கற்கும் மூதூர் மற்றும் மந்துவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த மாணவர்களே மதுபோதையுடன் பொலிஸாரிடம் அகப்பட்டவர்களாவர்.

இந்த இருவரையும் கொடிகாமம் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். மதுபோதையில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் குழப்பம் விளை வித்த மாணவனுக்கு 80 மணித்தியாலம் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறும், மதுபோதையுடன் தலைக்கவசம், சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவை இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்த மாணவனுக்கு 13 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (த-9)

# தீர்வு தொடர்பில் உடனடிக் கவனம்

## மைத்திரியிடம் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜன. 10

புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வரவேற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இனப் பிரச்சினைக்கு கௌரவமான தீர்வு எட்டுவது தொடர்பில் புதிய ஜனாதிபதி விரைவில் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளது.

இலங்கையின் 7 ஆவது ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவு செய்யப்பட்டார். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆலோசனையை செவிமடுத்து, மைத்திரிக்கு ஆதரவு வழங்கியமைக்காக இலங்கை மக்கள் குறிப்பாக வடக்கு – கிழக்கு மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றது. உண்மையான ஜனநாயகத்தை தமிழ் பேசும் மக்கள் அனுபவிப்பதற்கு, அதன் பெறுபேறுகளை தமிழ் மக்களும் பெறக் கூடிய வகையில், தேசிய பிரச்சினைக்கு கௌரவமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கும், இந்த நாடு எதிர்கொள்ளும் பல அவசரமான – ஆழமான – நெருக்கடி விடயங்கள் குறித்து புதிய ஜனாதிபதி மைத்திரிபால கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

# கடைசியாக அமைச்சரவை நேற்று கூட்டினார் மஹிந்த



கொழும்பு, ஜன. 10

மஹிந்த ராஜபக்ஷ கடைசியாக நேற்றுக் காலை தனது அமைச்சரவைக் கூட்டத்தை ஜனாதிபதி செயலகத்தில் நடத்தினார். இதில் முக்கிய அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டுக்கொண்டிருக்கையில், அலரிமாளிகையை விட்டுவெளியேறிய பின்னர், தனது இறுதி அமைச்சரவைக் கூட்டத்தை மஹிந்த ராஜபக்ஷ நடத்தினார். நேற்றுக் காலை 8.30 மணிக்கு கொழும்பு காலிமுகத்திடலிலுள்ள பழைய நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இந்த அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்பட்டது. சோகம் ததும்பிய முகங்களுடன் அமைச்சர்கள் இதில் பங்கெடுத்திருந்தனர். இந்தக் கூட்டத்தை முடித்துக் கொண்டு மஹிந்த வெளியேறினார். (த-5)

# பாப்பரசர் வருகையின்போது மன்னாருக்கு விசேட பஸ்

யாழ்ப்பாணம், ஜன. 10

பரிசுத்த பாப்பரசரின் மடுத் தேவாலயத்துக்கான வருகையை முன்னிட்டு விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத் துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மடுத் தேவாலயத்துக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி வருகை தரும் அவர் அங்கு ஆராதனை நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார். அதில் கலந்து கொள்ளும் பக்தர்களின் நலன்கருதி போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது. அதன்படி காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பஸ் நிலையங்களிலிருந்தும் யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்தும் எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பயணிகளின் வருகைக்கேற்ப பஸ்கள் ஒழுங்கு செய்யப்படும் என்று அவர் மேலும் அறிவித்துள்ளார். (த-4)

# தமிழகத் தலைவர்கள் மைத்திரிக்கு வாழ்த்து

தமிழ்நாடு, ஜன. 10

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றமைக்கு அரசியல் தலைவர்கள் பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டிலிருந்து வாழ்த்து தெரிவித்துள்ள மதி.மு.க பொதுச் செயலாளர் வைகோ.

என்றாவது ஒருநாள் அறம் வெல்லும். அநீதி அழியும் என்பதே தொன்றுதொட்டு வரும் தமிழர்களின் நம்பிக்கை. அக் கூற்றை மெய்ப்பிக்கின்ற வகையில் மஹிந்த தோற்கடிக்கப்பட்டுள்ளார். இந்தத் தேர்தலில் தமிழர் தாயகத்தில் குறிப்பாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் மஹிந்த படுதோல்வி அடைந்துள்ளார்.

இந்தத் தேர்தல் களத்தில் ஜனாதிபதியாக வெற்றி பெற்றுள்ள மைத்திரிபால சிறிசேன ஈழத் தமிழர்களுக்கு நீதி வழங்கி விடுவார் என்று எவரும் எதிர்பார்த்து ஏமாந்து விடவேண்டாம். ஆனால் இந்தத் தேர்தல் முடிவால் ஒரு நன்மை விளைந்து இருக்கின்றது –என்றார்.

பா.ம.க. நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ்,

தேர்தல் முடிவுகள் எதிர்பார்த்தபடியே அமைந்திருக்கின்றன. மைத்திரிபால சிறிசேன வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்தது வடக்கு – கிழக்கு மாகாண தமிழர்களின் வாக்குகள்தான் என்பதை மறுக்க முடியாது. 2005 ஆம் ஆண்டு தேர்தலில் மஹிந்த வெற்றி பெறுவதற்கு மறைமுகக் காரணமாக இருந்தவர்கள் தமிழர்கள் தான். அந்தத் தேர்தலை தமிழர்கள் புறக்கணித்ததால் தான் ரணில்விக்கிரமசிங்கவை வீழ்த்தி மஹிந்த ஜனாதிபதியாக முடிந்தது – என்றார்.

தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் வாழ்த்துச் செய்தியில்,

'இலங்கையின் புதிய அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்க இருக்கிறார். ஈழத் தமிழர் வாக்குகளால் மட்டுமே இவ்வளவு பெரிய வெற்றியைப் பெற்றிருக்கும் அவர், மஹிந்த வழியில் செல்லாமல் தமிழரின் நியாயமான அரசியல் விருப்பங்களை மதித்து நடக்க வேண்டும்–எனக் குறிப்பிட்டார். (த-10)

# தெற்கில் உள்ள சக்திகளுக்கு மீண்டும் ஒரு நல்லெண்ணம்

## மாற்றத்துக்கு வாக்கிட்ட அனைவருக்கும் நன்றி; யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 10

எமது கோரிக்கையை ஏற்று நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் மாற்றத்துக்காக வாக்களித்த இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் குறிப்பாக வடக்கு –கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் அ.இராசகுமாரன் தெரிவித்துள்ளதாவது:–

தேர்தல் வாக்குகள் மூலம் தமிழ் மக்கள் தெற்கிலுள்ள சக்திகளுக்கு மீண்டும் ஒரு நல்லெண்ணச் சமிக்ஞை வழங்கியுள்ளார்கள். தேர்தலில் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆனால் எம்முன் முக்கிய இரண்டு கடமைகள் உள்ளன. ஒன்று வடக்கு –கிழக்கு தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும். மற்றையது உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளாக போரினால் இடம்பெயர்ந்து தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறி அகதி வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் அனைத்து மக்களும் உடனடியாக மீள்குடியேற்றப்படவேண்டும். அத்துடன் நீண்ட காலமாகச் சிறையில் வாடும் முன்னாள்போராளிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் அனைவருக்கும் வாழ்வாதாரத்துக்குரிய வழிவகைகளைச் செய்வதோடு, அவர்களுக்கான இழப்பீடுகளும் வழங்க வேண்டும். அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு –கிழக்குக்கு என துரித அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

தமிழ் மக்களின் இந்த நியாய பூர்வமான கோரிக்கைகளை புதிய ஜனாதிபதி நிறைவேற்றுவார் என எதிர்பார்க்கிறோம். எதிர்காலத்தில் இலங்கைத் தீவானது உண்மையான சுதந்திரமும் சுபீட்சமும் கொண்ட நாடாகத் திகழ்வதற்கு எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்போம். என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-4)



## அறிவிக்கப்பட்டது தென்னாபிரிக்காவின் உலகக் கிண்ண அணி

ஆஸ்திரேலியா மற்றும் நியூஸி லாந்தில் நடைபெறும் உலகக் கிண்ண தொடருக்கான பல மான அணியை அறிவித்துள் ளது தென்னாபிரிக்கா.
15 வீரர்கள் கொண்ட அணி வருமாறு: –
ஏ.பி.டிவிலியர்ஸ் (தலைவர்), அம்லா, அபாட், பிஹார்டீன், குவிண்டன்
டி காக், ஜே.பி.டுமினி, பிளேசிஸ், தாஹிர், மில்லர்,
மோர்கெல், பார்னெல், பாங்கிஸோ, பிலாண்டர், ரூசோ, ஸ்டெய்ன் (த–ரி)

# இந்தியாவுக்கு எதிராக 4 சதங்கள்

## சாதனை படைத்த ஸ்டீவன் சிமித்



இந்திய அணிக்கு எதிராக நான்கு சதங்களை விளாசி ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்டீவன் சிமித் சாதனை படைத்துள்ளார்.
தொடர்ந்து இடம்பெற்ற 4 டெஸ்ட் போட்டிகளிலும் சிமித் சதமடித்துள்ளார். அடிலெய்டு–162, பிரிஸ்பேன்–133, மெல்போர்ன்–192, சிட்னி–117 என விளாசி பிரமிக்க வைத்துள்ளார்கள்.
டெஸ்டில் தொடர்ச்சியாக 4 அல்லது அதற்கு மேல் சதம் அடித்த ஐந்தாவது ஆஸ்திரேலியர் சிமித் ஆவார். இதற்கு முன்பு டொன் பிரட்மன் (தொடர்ந்து 6 டெஸ்டில் சதம்), ஜாக் பிங்கில்டன் (4), நீல் ஹார்வி (4), மேத்யூ ஹைடன் (4) ஆகிய ஆஸ்திரேலியர்கள் இந்தச்சாதனையைசெய் துள்ளனர்.
4 மற்றும் அதற்கு மேல் அடங்கிய டெஸ்ட் தொடரில் ஒவ்வொரு டெஸ்டிலும் சதம் அடித்த 2ஆவது வீரர் என்ற பெருமையும் சிமித்துக்கு கிடைத்துள்ளது.
ஏற்கனவே தென்னாபிரிக்காவின் கலிஸ் 2003–2004 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான 4 போட்டி கொண்ட தொடரில் ஒவ்வொரு டெஸ்டிலும் சதம் அடித்திருந்தார்.
இந்த டெஸ்டில் ஆஸ்திரேலியாவின் முதல் 6 வீரர்கள் 50க்கும் மேல் ஓட்டங்களை எடுத்துள்ளனர். ஆஸ்திரேலியாவின் முதல்தர 6 வீரர்கள் அனைவரும் ஒரே இன்னிங்ஸில் 50 ஓட்டங்களுக்கு மேல் கடப்பது இதுவே முதல் முறையாகும். மொத்தத்தில் இவ்வாறு நடப்பது 6 ஆவது நிகழ்வாகும்.
ஆஸ்திரேலிய அணி இந்தத் தொடரில் ஒவ்வொரு டெஸ்டிலும் (அடிலெய்ட் 7–517, பிரிஸ் பேன்–505, மெல்போர்ன்–530, சிட்னி 7–572) 500 ஓட்டங்களுக்கு மேல் குவித்துள்ளது.
4 க்கும் மேற்பட்ட தொடரில் ஒவ்வொரு டெஸ்டிலும் ஒரு அணி 500 ஓட்டங்களுக்கு மேல் எடுப்பது வரலாற்றில் இது 2ஆவது முறையாகும். இந்தச் சிறப்பை பெற்ற மற்றொரு அணி தென்னாபிரிக்கா (2003–2004 ஆம் ஆண்டு மேற்கிந் திய தீவுக்கு எதிராக) ஆகும்.
ஆஸ்திரேலிய வீரர் ஸ்டீவன் சிமித் இந்தத் தொடரில் இதுவரை 698 ஓட்டங்களை திரட்டியுள்ளார். 4 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலிய வீரர்களில் அதிகபட்சமாக ரிக்கி பொண்டிங் 706 ஓட்டங்கள் (2003–2004ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக) எடுத்துள்ளார். 2ஆவது இன்னிங்ஸில் சிமித் 9 ஓட்டங்கள் சேர்த்தால் இந்தச் சாதனையை முறியடித்து விடுவார்.
(த)

## ஸ்டார்க்கின் சர்ச்சைக்குரிய செய்கை

முரளி விஜயின் விக்கெட்டை வீழ்த்திய பிறகு ஸ்டார்க்கின் அநாகரிகச் செய்கை தற்பொழுது சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.
சிட்னி டெஸ்ட் ஆட்டத்தின் 2 ஆம் நாள் ஆட்டமான நேற்று இந்திய தொடக்க வீரர் முரளி விஜயின் இலக்கை வீழ்த்திய மிட்செல் ஸ்டார்க் அவரை நோக்கிச் சில செய்கைகளைச் செய்தது பற்றி ஆஸ்திரேலிய அணித் தலைவரான சிமித் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.
இந்த டெஸ்ட் ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் டேவிட் வோர்னர் மற்றும் விராட் கோஹ்லி இருவரும் ஆட்டமிழந்து செல்லும் துடுப்பாட்ட வீரரை நோக்கி இழிவான செய்கைகளைச் செய்வது முடிவுக்கு வரவேண்டும், இது அநாகரிகமானது என்று கூறியிருந்தனர். இந்நிலையில் இந்தியாவின் இன்னிங்ஸ் ஆரம்பமாகி ஸ்டார்க்கின் 3ஆவது பந்தில் முரளி விஜய் ஆட்டமிழந்தார். அவர் பவிலியன் செல்லக் கிளம்பியபோது ஸ்டார்க் அவரை நோக்கிச் சில செய்கைகளைச் செய்தது இப்போது சர்ச்சையாகியுள்ளது.
இது குறித்து ஆஸ்திரேலிய அணித் தலைவர் சிமித் கூறும்போது; நடுவர்கள் இந்த விவகாரம் பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. ஆனால், ஆட்டத்தில் இது தேவையற்றது என்றே நான் கருதுகிறேன். ஆட்டமிழந்து செல்லும் வீரரை நோக்கி இழிவாகச் செய்கைகளைச் செய்வது முடிக்கப்படவேண்டும். ஆனால், ஸ்டார்க் செய்ததை நான் இன்று பார்க்கவில்லை, நான் ஹடினுடன் விஜயின் ஆட்டமிழப்பைக் கொண்டாடிக் கொண்டிருந்தேன். இது தேவையற்றது. இப்போது முதல் இலக்குகள் விழுந்தால் எங்கள் வீரர்கள் அமைதியாக இருப்பதையே நான் விரும்புகிறேன்.' என்று தனது அதிருப்தியை தெரிவித்துள்ளார்.
(ரி)




## டோனியின் கோரிக்கையை நிராகரித்தது தேர்வுக் குழு




உலகக் கிண்ண போட்டிக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியைச் சந்திப் பாட்டீல் தலைமையிலான தேர்வுக் குழு மும்பையில் கூடி தேர்வு செய்தது.
ஆஸ்திரேலியாவில் உள்ள டோனி வீடியோ மூலம் வீரர்கள் தேர்வு விவாதத்தில் கலந்து கொண்டார்.
இதில் டோனி விடுத்த கோரிக்கை எதையும் தேர்வுக் குழுவினர் ஏற்க மறுத்ததாக தகவல் வெளியாகி உள்ளது.
கூடுதல் தொடக்க வீரராக முரளி விஜயையும், ஐந்தாவது வேகப்பந்து வீரராக மொகித்சர்மா அல்லது வருண் ஆரோனை தேர்வு செய்ய வேண்டும் என்று டோனி வற்புறுத்தி உள்ளார். ஆனால், தேர்வுக் குழுவினர் இதை ஏற்றுக் கொள்ளவில்லை.
தமிழகத்தைச் சேர்ந்த முரளி விஜய், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக ஆடினார். இதனால் அவரை டோனி பரிந்துரை செய்தார். வருண் ஆரோன், ஆஸ்திரேலியா டெஸ்ட் தொடரில் இடம் பெற்று இருக்கிறார். அவர் டோனியின் சொந்த ஊரான ஜார்க்கண்டைச் சேர்ந்தவர். மொகித் சர்மா, டோனி தலைமை வகிக்கும் சென்னை சுப்பர் கிங்க்ஸ் அணியில் இடம் பெற்று இருக்கிறார். இதனால் அந்த இருவரில் ஒருவரை தேர்வு செய்ய வேண்டும் என்று டோனி வற்புறுத்தி இருக்கிறார். இவற்றை எல்லாம் தேர்வுக் குழு நிராகரித்தது.
கடந்த உலகக்கிண்ணப் போட்டியில் டோனியின் விருப்பப்படி தான்பியூஸ்சாவ்லாதேர்வுபெற்றார்என்பதுகுறிப்பிடத்தக்கது.(த)

## டெஸ்ட் தரப்படுத்தலில் தென்னாபிரிக்கா முதலிடம்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக கேப் டவுணில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.
இந்தப் போட்டியின் இறுதிநாளான நேற்று முன் தினம் 124 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென் ஆப்பிரிக்கா வீரர்கள், இரண்டு விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து இலக்கை அடைந்தார்கள்.
இந்த வெற்றியின் மூலம் சிறந்த டெஸ்ட் அணிகளை வரிசைப் படுத்தும் தர வரிசை பட்டியலில் தென்னாபிரிக்கா அணி தொடர்ந்தும் முதலாவது இடத்தை தக்க வைத்துள்ளது.
அத்துடன் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான சுற்றுத்தொடரிலும் இரண்டுக்கு பூச்சியம் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றுள்ளது. (த)

தற்போது யாழ் நகரில்...

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேனவின் பதவியேற்பு வைபவம் நேற்று மாலை சுதந்திர சதுக்கத்தில் மிக எளிமையாக நடைபெற்றது. ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க உட்பட பெரும் எண்ணிக்கையான அரசில் பிரபலங்கள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்துக் கூறினர்.

(த)


உதயன்
advt@uthayan.com
0215671111

**தென் இந்திய திருத்தல யாத்திரை**

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா பாண்டிச்சேரி ஆகிய 5 மாநிலங்களுக்கூடான யாத்திரை.

| | |
|---|---|
| ஆரம்பம்: 20.01.2015 | நிறைவு: 03.02.2015 |
| யாத்திரிகர்: 10 | நாள்கள்: 15 |

எமது சொந்த சேவையாக:
ஆலயங்களில் எடுக்கும் 50 புகைப்படங்களும், நுழைவுக்கட்டணங்களும் எம்மால் பெற்றுத் தரப்படும்.
தொ.பே: 077 768 0102, 011 303 0806
கலாநிதி T.ஸ்ரீரங்கநாதன் (சி/19012) (4.3)


**தேவை**

எழுதுவினைஞர் மற்றும் கீழ் வகுப்புகளுக்கு கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை.
நேரில் வருகை தரவும் 11.01.2015 ஞாயிறு 4.00 மணி.
தொ.பே:077 175 3838
ஐடியல் கல்லூரி
மானிப்பாய்.
நீரின் ஆஸ்பத்திரி பின் வீதி.


**31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**

கடந்த 10.12.2014 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர் சுரேந்திரன் சதீஸ்கண்ணா (சதீஸ்)**



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (11.01.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்குஅன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்.




BTEC HND in
**BIOMEDICAL SCIENCE**
Leadind to BSc (Hons) from UK universities

- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்




மருத்துவ / உயிரியல் / உயிர் இரசாயனவியல் துறையில் ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் பாடநெறி

ISO 9001:2008 CERTIFIED
14 Years of Trust & Excellence in Higher Education

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

Colombo : 077 482 9765
Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747

Macro Ads

Building Careers - Transforming Lives


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.